KADAMBARI.

Translated From Sanskrit.

BY
Pandit, R. V. KRISHNAMACHARIAR,
ABHINAVA BATTA BANA.

. KAMALAMBA PRESS. KUMBAKONAM.

PRICE.] 1925. [5 ANNAS.

ஸ்ரீ:

காதம்பரி.

...லகு கத்திய ஸங்கிரஹ மாலையில் இரண்ட...
...மலராக வெளியிடப்பட்டிருக்கும் வடமொழிக்
காதம்பரியின் நேரான மொழி...பு.

அபிநவ பட்ட பாண
பண்டித, ரா. வே. கிருஷ்ணமாசாரியார்
மொழிபெயர்த்தது.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடம்.
1925.
...விலை] [5 அணா.

ஸ்ரீ:

Kadambari

காதம்பரி.

லகு கத்திய ஸங்கிரஹ மாலையில் இரண்ட
மலராக வெளியிடப்பட்டிருக்கும் வடமொழிக்
காதம்பரியின் நேரான மொழிபெயர்ப்பு.

R. V. Krishnamachariar

அபிநவ பட்ட பாண

பண்டித, ரா. வே. கிருஷ்ணமாசாரியார்

மொழிபெயர்த்தது.

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடம்.

Kumbakonam

விலை] 1925. [5 அணா.

Sri Komalambika press

ஸ்ரீ:

காதம்பரி.

விதிசை என்னும் பெயருள்ள இரா[illegible]னியில சூத்ரகன் என்று பிரஸித்திபெற்ற (ஓர்) அரசன் இருந்தான்.

ஒரு ஸமயம் ஒரு சண்டாளப் பெண், கூட்டிலுள்ள கிளியை (கிளிக்கூட்டை) எடுத்துக்கொண்டு வந்து கொலு மண்டபத்திலுள்ள அரசனை அணுகி வணங்கினாள். "அரசே, வைசம்பாயநன் என்ற இந்தக் கிளி ஸகல சாஸ்திரங்களின் பொருட்களையும் உணர்ந்தது. ஆகையால் இது தம்முடையதாகச் செய்யப்பட்டடும்" என்று தெரியப்படுத்தவும் செய்தாள்.

அப்பொழுது அக்கிளி அரசனுக்கு எதிர்முகமாக இருந்து வலதுகாலை உயர்த்திக்கொண்டு ஜயத்தொனி செய்தது.

அரசனோ வியப்படைந்தவனாய் "நீ ஆதி (அடி) முதல் தனது (உனது) ஜன்மத்தை (ப் பற்றி) அறிவிக்கவேண்டும்; எந்த நாட்டில் நீ எவ்வாறு பிறந்தாய்? தாய் யாவள்? தந்தை எவர்? எவ்வாறு சாஸ்திரங்களின் பயிற்சி? எங்ஙனம் கூட்டில் அடைபட்டது? நீ நமது ஆவலை நீக்கவேண்டும்" என்று வினவினான்.

வைசம்பாயநனோ ஆதரத்துடன் சொல்லலுற்றான்—மத்திய தேசத்திற்கு ஆபரணமாகிய விந்தியமலைக்காடு இருக்கின்றது. அதில் பகவானாகிய அகஸ்திய மாமுனிவர்க்கு கோதாவரிநதியால் சூழப்பட்ட (ஓர்) ஆச்சிரமஸ்தலம் இருந்தது. அதற்குச் சற்றுத் தூரத்தில் ஆழமுள்ளதும் நிகர்

ம்பை என்னும் பெயருள்ள தாமரையோடை ர. அதன் மேல்கரையில் முதிர்ந்த பெரிய முள் ஒன்று) இருந்தது.

அதில் கிளைகளின் நுனிகளிலும் பொந்துக்களின் உட் ங்களிலும் தளிர்களின் இடைகளிலும் கவைகளிலும், ...லிருந்து வந்த கிளிகளுடையவும் (மற்றைப்) புறவைகளுடையவும் கூட்டங்கள் வஸித்தன. ஒரு பாழும் பொந்தில் மனைவியுடன் கூடிவஸித்த (என்) தகப்பனாருக்கு நான் ஒரு பிள்ளையே உண்டானேன். எனது தாய் பிரஸவ வேதனையால் வேறுலகு சென்றனள். துயரமுள்ளவராயிருந்தும் (என்) பிதா புத்திர வாத்ஸல்யத்தால் வருத்தத்தை உள்ளடக்கிக்கொண்டு (தாம்) ஒருவராக என்னை வளர்ப்பதிலேயே கருத்துடையவராயிருந்தார்.

ஒருஸமயம் நன்கு விடியற்காலமானபோது, வேட்டையில் ஈடுபட்ட பெரிய ஜனக்கூட்டத்தின், காட்டைக் கலக்கிய பேரொலியைச் செவியுற்றேன். எதிர் நோக்கிவரும் வேடர்படையைக் காணவும் செய்தேன்.

அதில் வயதுசென்ற ஒரு வேடன், படிகளால் ஏறுவதுபோலக் கிளைகளால் பிரயாஸமில்லாமலே அந்த இலவமரத்தை(த்தில்) ஏறி, கிளிக்குஞ்சுகளை உயிர் நீங்கியவைகளாகச் செய்து பூமியில் போட்டான். (என்) தகப்பனாரோ விரித்துக் கவிழ்த்திய இறகுகளால் என்னை மூடிக்கொண்டு, இன்னது செய்வது என்று அறியாதவராயிருந்தார். இந்தப் பாபியும் பொந்திலிருந்து இழுத்து(என்) தகப்பனாரை உயிர் போனவராகச் செய்தான். இறந்துபோன அவரைத் தரையில் தலைகீழாக விட்டெறிந்தான். நானும் அவருடைய கால்களின் மத்தியில் கழுத்தை நுழைத்தவனாய், அவரோடு கூடவே விழுந்தேன். வாழ்நாள் எஞ்சியிருப்பதால் என்

அவயவங்கள் நொறுங்கவில்லை. ஜீவிப்பதில் ஆசைகொண்ட (இனிப் பிழைக்கலாம் என்று எண்ணங்கொண்ட) என்னைப் பலத்த தாகம் பரவசமாக்கிற்று. (வாட்டிற்று)

இந்த ஸமயம் (அந்தத்) தடாகத்திற்குச் சற்றுத்தூரத்திலுள்ள ஆச்சிரமத்தில் வஸிக்கின்ற ஹாரீதர் என்ற பெயருள்ள ஜாபாலிமுனிவரின் புத்திரர், அதே தாமரைப் பொய்கையை (க் குறித்து) நீராட எண்ணமுள்ளவராய் வந்து சேர்ந்தார்.

அவர் அந்த நிலைமையிலுள்ள என்னைப் பார்த்துக் கருணை பிறந்தவராய் (என்னை) வாவிக்கரைக்குக் கொண்டுவரச்செய்து விரலால் சில நீர்த்துளிகளை (விழவிட்டுக்) குடிக்கச் செய்தார். ஸ்நாநமுடிவில் என்னை எடுத்துக்கொண்டு தபோவனத்தை நோக்கி மெல்லச் சென்றார்.

சென்றதும், என்னை ஓரிடத்தில் வைத்து, ஹாரீதர் தகப்பனாரின் கால்களைப் பிடித்துவிட்டுக் (தகப்பனாரை நமஸ்கரித்து) கொஞ்சம் சமீபத்திலுள்ள தர்ப்பாஸனத்தில் உட்கார்ந்தார். சிறிது ஆச்சரியமடைந்த ஜாபாலிமுனிவர் என்னை மிகவும் சாந்தமான பார்வையால் பார்த்துவிட்டுத் "தனது அடங்காமையின் பயன் இதனால் (கிளியால்) அனுபவிக்கப்படுகின்றது" என்று கூறினார்.

"பகவானே, எவ்வாறான அடக்கமில்லாமை இதனால் செய்யப்பட்டது? எங்குச் செய்யப்பட்டது? எதற்காகச் செய்யப்பட்டது? வேறு (முன்) ஜன்மத்தில் இது யாராயிருந்தது? (சொல்லவேண்டும்)" என்று முனிவர் கூட்டத்தால் வேண்டப்பட்டவரான அம்முனிவர் மறுமொழி கூறினார்.

அவந்தி நாட்டில் மூன்றுலகமுழுதுக்கும் பொட்டான (அலங்காரமான) உஜ்ஜயினி என்ற பட்டணம் இருக்கின்றது.

அந்தப் பட்டணத்தில் நளன் நஹுஷன் தசரதன் என்றவர்க்கு நிகரான தாராபீடன் என்ற அரசன், பிரஜைகளுடைய துன்பத்தைத் துடைத்தவனாயிருந்தான். அந்த அரசனுக்கு எல்லாக் காரியங்களிலும் புத்தியைச் செலுத்தும் மந்திரியாக சுகநாஸன் என்ற பிராமணன் இருந்தான். மேலும், அந்த வேந்தனுக்கு அந்தப்புர ஸ்திரீகளெல்லோருக்கும் தலைவியாய் விலாஸவதி என்னும் கோப்பெருந்தேவி இருந்தாள்.

அவன் (தாராபீடன்) பெரும்பாலும் இவ்வுலக இன்பங்களெல்லாவற்றினுடைய முடிவுகளையும் அடைந்தான். (எல்லாவற்றையும் அநுபவித்தான்) பிள்ளையின் முகத்தைக் காணுமின்பம் ஒன்றைமட்டும் அடையவில்லை.

எவ்வாறெவ்வாறு யௌவநம் கடந்துகொண்டிருந்ததோ, அவ்வாறவ்வாறு இவனுக்குப் பிள்ளையில்லாமையால் பிறந்த மனவருத்தம் வளர்ந்துவந்தது.

இங்ஙனம் காலம் செல்ல, ஒருநாள் இரவுபெரும்பாலும் குறைந்தபொழுது, (அரசன்) சொப்பனத்தில் சந்திரனை விலாஸவதியின் வாயில் புகுந்தவனாகக் கண்டான். உணர்ந்தவன் எழுந்து அதேக்ஷணத்தில் சுகநாஸனை வரவழைத்து அவனுக்கு அந்தச் சொப்பனத்தைச் சொன்னான். அவன் (மந்திரி) ஸந்தோஷம் பிறந்தவனாய், (அரசனை) (நோக்கி) "அரசரே, நமக்கும் பிரஜைகளுக்கும் நெடுநாளாக இருந்த மனோரதங்கள் (இன்று) பலித்தன. இன்று இரவு என்னாலும் சொப்பனத்தில் எனது மனைவியாகிய மனோரமையின் மடியில் திவ்ய உருவங்கொண்ட ஒரு பிராமணரால் மலர்ந்த ஒரு வெண்டாமரைப் புஷ்பம் வைக்கப்பட்டதாகக் காணப்பட்டது. முன்னாலேற்படும் சுபசகுனங்கள், ஆநந்தம் அடுத்திருப்பதாக அறிவிப்பனவன்றோ" என்று மறுமொழி கூறினான்.

சிறிது நாள் சென்றதும், தேவதையின் அநுக்கிரஹத்தால் கர்ப்பம் விலாஸவதியிடம் புகுந்தது. பின்பு முறையே பிரஸவகாலம் நிரம்ப, நல்லநாளில் சிறந்த வேளையில் விலாஸவதி பிள்ளையைப் பெற்றாள். அப்பொழுதே சுகநாஸனுக்கும் புதல்வன் பிறந்தான். ஆறாவதுநாள் (இரவு) விழிப்புக் கடந்து, பத்தாம்நாள் வந்ததும் சுபமுஹூர்த்தத்தில் அரசன் தன் பிள்ளைக்குச் சொப்பனத்தையொட்டியே சந்திராபீடன் எனப் பெயரிட்டான். மறுநாள் சுகநாஸனும் (தன்) பிள்ளைக்குப் பிராமணர்க்குரிய வைசம்பாயநன் என்ற பெயரை வைத்தான்.

தாராபீடன், விளையாட்டில் ஈடுபாட்டைத் தடுப்பதற்காகப் பட்டணத்திற்குப் புறமே கல்விச் சாலையைக் கட்டுவித்தான். வித்தைகள் எல்லாவற்றையும் கைக்கொள்வதற்காக நல்ல நாளில் வைசம்பாயநனைத் துணையாகக்கொண்ட சந்திராபீடனை ஆசிரியர்களுக்கு அளித்தான். (ஆசிரியர்களிடம் ஒப்படைத்தான்)

சந்திராபீடனும் மனத்தை வேறுவிஷயங்களில் செலுத்தாமையால் சிறிது காலத்தா(த்தி)லேயே எல்லா வித்தைகளையும் கிரஹித்துக்கொண்டான். வைசம்பாயநனும் கலைகளெல்லாவற்றாலும் அவனைப் பின்பற்றிவந்தான்.

இவ்வண்ணம் ஸகல வித்தைகளையும் கற்றுக்கொண்டவனும் யெளவநப் பருவம் தொடங்கியிருப்பவனுமான சந்திராபீடனை வரவழைக்கத் தாராபீடன் வலாஹகன் என்ற பெயருள்ள படைத்தலைவனை அனுப்பினான்.

அவ்வலாஹகன் கல்விச் சாலையை அடைந்து சந்திராபீடனை அணுகி வணக்கம் காட்டியவனாய் (வருமாறு) விண்ணப்பம் செய்தான்—“ராஜகுமாரா, ‘நமது எண்ணங்கள் நிறைவேறின. சாஸ்திரங்கள் (உன்னால்) கற்கப்பட்டன. கல்விச்சாலையிலிருந்து வெளிவர எல்லா ஆசிரியர்களாலும்

அநுமதியளிக்கப்பட்டிருக்கின்றாய். கல்விப் பயிற்சியைக் கைக்கொண்ட உன்னை ஜனங்கள் உதித்துக் கிளம்பும் பருவ காலச் சந்திரனையொப்பப் பார்க்கட்டும்' என்று மஹாராஜர் கட்டளையிடுகின்றார். மஹாராஜரால் அனுப்பப்பட்ட இந்திராயுதம் என்ற பெயருள்ள குதிரை வாயிலில் நிற்கின்றது. 'இந்தச் சிறந்த குதிரை ஸமுத்திர ஜலத்திலிருந்து கிளம்பியது, ஒன்றுக்குப் "பிறந்ததன்று' என்று சொல்லிப் பாரஸீக தேசத்தரசனால் (நம்) அரசருக்கு இந்தக் குதிரை அனுப்பப்பட்டது. ஆகையால் இக்குதிரை (நீர்) ஏறுவதால் அநுக்கிரஹிக்கப்படட்டும்."

பின்பு சந்திராபீடன் கல்விச்சாலையிலிருந்து வெளிவந்து அந்தக் குதிரையை (குதிரைமீது) ஏறிக்கொண்டு நகரத்திற்கு நேராகப் பயணமானான். முறையே சந்திராபீடன் அரமனை வாயிலை அடைந்து, குதிரையினின்றும் இறங்கினான். இறங்கியதும் (தன்) கையால் வைசம்பாயநனைக் கையில் பிடித்துக்கொண்டு, வலாஹகனால் வழிகாட்டப்பட்டவனாய் அரமனையுள் நுழைந்து தகப்பனாரை வணங்கி (ப்பிறகு) அவரால் விடப்பட்டவனாய், அந்தப்புரம் சென்று தாயாரை நமஸ்கரித்தான்.

அரமனையிலிருந்து வெளிக்கிளம்பி இந்திராயுதமேறிக் கொண்டு சுகநாஸனைக் காணச் சென்றான். சுகநாஸனுடைய கிரஹத்துட்சென்று சுகநாஸனை, வெகுதூரம் வணங்கிய தலையால் அடிபணிந்தான். அவனால் (சுகநாஸனால்) விடப்பட்டவனாய், வைசம்பாயநனுடைய தாயாகிய மனோரமையையக் கண்டுவிட்டு (அங்கிருந்து) வெளிவந்து இந்திராயுதமேறி, (தன்) தகப்பனாரால் முன்னரே ஏற்படுத்தப்பட்டிருந்த வீட்டை அடைந்தான்.

மறுநாள் விடியற்காலையிலேயே கைலாஸன் என்ற பெயருள்ள கஞ்சுகி (அந்தப்புர வேலைக்காரன்) கன்னிகை

ஒருவளால் பின்தொடரப்பட்டவனாய் அடுத்துவந்து "ராஜகுமாரா, குளூததேசத்தரசன் மகளும் பத்திரலேகை என்ற பெயருள்ளவளுமான இவள், முன்னம் (நம்) மஹாராஜராால் சிறைபிடிக்கப்பட்ட பெண்களுடன்கூடக் கொண்டுவரப்பட்டவள், தேவியாராலும் (மஹாராணியாராலும்) பெண்ணைவிடப் பேதமில்லாமல் வளர்க்கப்பட்டுவருபவள். ஆகையால் இவள் தேவரீருக்கு வெற்றிலைப் பெட்டியை வஹிப்பவளாகத் தகுந்தவள் என்று நினைத்துத் தேவியாரால் அனுப்பப்பட்டிருக்கின்றாள்" என்று கூறிவிட்டுச் சென்றான். பத்திரலேகையும் அன்றுதொட்டு நிழலையொப்ப ராஜகுமாரனுடைய பக்கத்தைவிட்டு விலகவில்லை.

பிறகு சிலநாட்கள் செல்லவும், அரசன் மங்களகரமான குடத்தைத் தானே எடுத்துயர்த்தியவனாய்ச் சுகநாஸனோடு கூடிப் பரிசுத்தமான தினத்தில் மந்திரங்களால் புனிதமான ஜலத்தைக்கொண்டு பிள்ளையை நீராட்டினான். (பிள்ளைக்குப் பட்டாபிஷேகம்செய்தான்) பின்னர்ச் சந்திராபீடன் கொலுமண்டபத்தை அடைந்து, சந்திரன் மேருமலையின் கொடுமுடிமீது ஏறினாற்போலத் தங்கமயமான சிங்காதனத்தின் மீதேறியிருந்தான்.

(சிங்காதனம்) ஏறிய இவனது திக்குவிஜயப் புறப்பாட்டைத் தெரிவிப்பதாய்ப் பெரும்பறை ஒலித்தது. பின்னர்ச் சந்திராபீடன் பேரிகையின் சப்தத்தைக்கேட்டுக் கொலுமண்டபத்தினின்றும் வெளிப்போந்தவனாய் முதலிலேயே இந்திரனுடையதான (கிழக்கு) திக்கைக் குறித்துப் பயணப்பட்டான். வைசம்பாயநனும், பயணத்திற்குரிய சுபகாரியங்களைச் செய்துகொண்டவனாய், இந்தச் சந்திராபீடனின் அருகுவந்து சேர்ந்தான்.

சந்திராபீடன் புறப்பட்டவனாய் முதலில் கிழக்குத் திக்கையும், பிறகு திருசங்குவைப் பொட்டாக (அலங்கார

மாக) வுள்ள (தெற்குத்) திக்கையும், பின்னர் வருணனை அடையாளமாகவுள்ள (மேற்குத்) திக்கையும், பின்பு ஸப்தருஷி நக்ஷத்திரங்களின் ஒளியால் நிறம்பெற்ற (வடக்குத்) திக்கையும் வென்றான். மூன்று வருஷங்கள்கொண்டு பூமண்டலம் முழுதும் சுற்றிவிட்டான். பிறகு ஒரு ஸமயம், கைலை மலைக்கு ஸமீபமாக ஸஞ்சரிக்கின்றவர்களும் ஹேமகூட மலையை வீடாகக் கொண்டவர்களுமான கிராதர்களுடைய இருப்பிடமான ஸுவர்ணபுரத்தையும் வென்று கைப்பற்றிக் கொண்டான். தனது சேனை இளைப்பாறும் நிமித்தம் சில நாட்கள் அங்குத் தங்கினான்.

ஒருகால் அங்கிருந்தவனாகவே (அங்கிருக்கும் பொழுதே) இந்திராயுதம்மீதேறிக்கொண்டு வேட்டையாடப் புறப்பட்டவனாய்க் காட்டைச் சுற்றித் திரிந்தவனாய், மலையின் கொடுமுடியினின்றும் இறங்கிய ஆண் பெண் இரு கின்னரர்களைத் தற்செயலாய்க் கண்டான். (அவர்களைப்) பிடிக்கவேண்டுமென்கிற விருப்பங்கொண்டவனாய், ஓடும் அவர்களை வெகுதூரம் பின்தொடர்ந்தான். பின்தொடரப்பட்ட அவ்விருவரும் எதிரில் நின்ற மலையின் உயரமுள்ள கொடுமுடியை (முடிமீது) ஏறிவிட்டார்கள்.

அவ்விருவரும் ஏறிவிடவே, அவர்கள் பக்கம் செலுத்தியிருந்த பார்வையைத் திருப்பித் தானாகவே சிரித்துக் கொண்டு (வருமாறு) எண்ணலானான்— "குழந்தையைப் போல என்னால் ஏன் வீணில் (எனது) ஆத்மா சிரமப்படுத்தப்பட்டது? இவ்விரு கின்னரர்களும் பிடிக்கப்படின் பயன் யாது? பிடிக்கப்படாவிடின் பயன் யாது? அந்தோ. என்னே! எனது மூர்க்கத்தன்மையின் போக்கு. எந்த வழியாலே (நான்) திரும்பிச் செல்லலாமோ, அவ்வழி இவ்வன் காட்டில் வந்த (வரும்பொழுது) என்னால் பார்த்துவைக்கப்படவில்லை. ஆதலால் இப்பொழுது தெற்குத் திக்கைப் பிடித்

துக்கொண்டு தானகவே ஊஹித்துஊஹித்து நடக்கவேண்டும். தான் செய்த குற்றங்களின் பயன் அவசியம் தன்னலேயே அநுபவிக்கப்படவேண்டுமல்லவா" என்று உறுதி செய்துகொண்டு குதிரையைத் திருப்பினன்.

குதிரையைத் திருப்பியவனய் "இந்த ஸூரியபகவான் இப்பொழுது ஆகாசமத்தியை அலங்கரிக்கின்ருன். இந்திராயுதமும் களைத்திருக்கின்றது. ஆகையால் குளித்து நீர் குடித்து விடாய்தீர்ந்ததாக இதனைச் செய்துவிட்டுத் தானும் (நானும்) தண்ணீர் குடித்துச் சற்று நேரம் களைப்பாறிப் பின்பு புறப்பட்டுச் செல்வேன்" என்று எண்ணி ஜலந்தேடியவனய் அடிக்கடி இங்குமங்கும் பார்வையைச் செலுத்தியவனய், வடகிழக்கான திசையில், ஒரு மரத்தோப்பின் நடுவில் நிகரற்றதும் மனதை மிகவும் கவர்கின்றதுமான அச்சோதம் என்னும் வாவியைக் கண்டான்.

அதன்தென்கரையை அடைந்து, பல்லணம்(ஜேணம்) கழற்றிய இந்திராயுதத்தை வாவியில் இறக்கி, அது தண்ணீர் குடித்து இஷ்டப்படி குளித்தபின் கரையேற்றி, அருகிலுள்ள ஒரு மரத்தின் அடிக்கிளையில் கட்டிவிட்டு, மறுபடியும் ஜலத்தில் இறங்கினன்.

பின்பு இரு கைகளையும் கழுவியவனய், ஜலமயமான உணவை உட்கொண்டு தடாக ஜலத்திலிருந்து வெளியேறினன். சற்றுநேரம் விடாய் தீர்த்துக்கொண்டவனய், வடகரையில் கிளம்பியதும் வீணைத் தந்தியின் ஒலியோடுகூடியதும் மானிடர்க்கு வாய்க்காததுமான பாட்டுத் தொனியைச் செவியுற்ருன். கேட்டதும் ஆவல் பிறந்தவனய், அப்பாட்டுத் தொனியைக் குறிவைத்துக்கொண்டு மேற்கிலுள்ள (அந்தத்) தடாகக்கரைக்காட்டின்வரிசையோடு சென்ருன்.

முறையே அந்த இடத்தை அடைந்து, சிவபகவானுடைய யாருமில்லாக் கோயிலைக் கண்டான். அதில் நுழை

ந்து, நான்குமுகமுள்ள சராசரகுருவான சிவபகவானைப் பார்த்தான். அப்பகவானுடைய தென்பாகத்துள்ள மூர்த்தியைப் பற்றிக்கொண்டு (அப்பகவானுக்கு) எதிர்முகமாயிருப்பவளும் பிரமாஸனம் ஏற்றிருப்பவளும், பூணூலால் சரீரத்தூய்மை வாய்ந்தவளும், மடியிலுள்ள தந்தத்தாலாகிய வீணையை மீட்டுபவளும், மமகாரம் அற்றவளும், அஹங்காரம் ஒழிந்தவளும், பாசுபதவிரதம் கைக்கொண்டவளுமாகிய ஒரு கன்னிகையைக் கண்டான்.

பின்பு, பாட்டின் முடிவில் அக்கன்னிகை எழுந்து வலம்வந்து சிவபிரானை நமஸ்கரித்தவளாய்த் திரும்பிச் சந்திராபீடனை (நோக்கி) "விருந்தினர்க்கு நல்வரவு. மஹாபாக்கியம்பெற்ற (நீர்) எப்படி இவ்விடத்தை அடைந்தீர்? ஆதலின் எழுந்திரும். வரப்படலாம். விருந்தினர்க்குரிய வழிபாடு அனுபவிக்கப்படட்டும். (பெற்றுக்கொள்ளப் படட்டும்)" என்று கூறினாள்.

இவ்வாறு சொல்லப்பட்ட சந்திராபீடன் (முன்) நடக்கும் அவளைப் பின்தொடர்ந்து நடப்பவனாய்க் குஹையை அடைந்தவனாய் அதிதிபூஜை எல்லாவற்றையும் வணக்கத்துடன் பெற்றுக்கொண்டான். சிறிது நேரம்போல் சும்மாயிருந்துவிட்டுப் பிறகு அவளால் வினவப்பட்டவனாய், முறையே திக்குவிஜயம்முதல் தன் செய்திகளெல்லாவற்றையும் சொன்னான்.

பிறகு(சந்திராபீடன்) போஜனத்தை முடித்துக்கொண்டவளும், ஸந்தியாகாலத்துக்குரிய ஆசரணைகளைச் செய்தவளும், கற்பாறையில் கவலையற்று உட்காந்துகொண்டவளுமான அக்கன்னிகையை அடக்கத்துடன் அணுகி, "பகவதி, மானிடத்தன்மையில் ஏற்படக்கூடிய சிறுமை என்னைக் கேள்வி கேட்பதில் (கேட்க) தூண்டுகின்றது. இந்தப் பருவம் எங்கே? இந்த உருவம் எங்கே? இந்தப் பெரும் அழகு

எங்கே? ஐம்பொறிகளின் இவ்வடக்கம் எங்கே? ஆதலின் எனக்கு விந்தையாகவே தோற்றுகிறது. எதற்காக இளம் பிராயத்தில் விரதத்தைக்கைக்கொண்டது? நீங்கள் எல்லாவற்றையும் தெரிவிக்கவேண்டும்" என்று வணக்கத்துடன் வினவினான்.

பின்பு அவள் சொல்லத் தொடங்கினாள்—பாரதவருஷத்திற்கு வடக்கில் கிம்புருஷம் என்ற வருஷத்தில் ஹேமகூடம் என்ற வருஷ பர்வதம் இருக்கின்றது. அதில் கந்தர்வ குலத்திற்கு அதிபதியாகிய ஹம்ஸன் என்பவர் வஸிக்கின்றார். அவர் கௌரி என்னும் அப்ஸரஸ்திரீயை மனைவியாகச் செய்துகொண்டார். மஹாத்மாக்களான அவ்விருவர்க்கும் இத்தகைய நான் துக்கப்படுவதற்காகவே ஒரு பெண்ணாய்ப் பிறந்தேன். முறையே எனது உடம்பில் யௌவநத்தால் அடி வைக்கப்பட்டது.

பிற்பாடு ஒருஸமயம் நான் (என்) தாயாரோடுகூட அச்சோததடாகத்தைக் குறித்து நீராடச் சென்றேன். அங்கு (அத்தடாகத்தின்) கரையில் மாங்களிருக்குமிடம் அழகாயிருக்கிறதென்று ஸகியோடுகூடி ஸஞ்சரித்துக்கொண்டிருந்தேன்.

ஓரிடத்தில் கானகக் காற்றினால் திடீரெனக் கொண்டுவரப்பட்டதும், மற்றை வாஸனைகளை அடக்கிவிடுவதுமான ஒரு பூமணத்தை முகர்ந்தேன். "இஃது எங்கிருந்து" என்ற ஆவலேற்றியவளாய்ச் சில அடிகள் நடந்து, தேஜஸ் பெரிதுமுள்ளவரும் தமக்குத் தகுந்த தோழரான மற்றொரு முனிகுமாரரால் பின்தொடரப்படுகிறவரும் மனத்தை அடியோடு கவர்கின்றவரும் நீராடவந்திருப்பவருமான ஒரு முனிகுமாரரைக் கண்டேன்.

அவரால் காதில் அணியப்பெற்றதும், முன்னம் (என்னால்) பார்க்கப்படாததுமான ஒரு பூங்கொத்தைப் பார்த்து

விட்டு "ஓஹோ! மற்றைப் பூக்களின் மணத்தை அடக்கிய இவ்வாஸனை இதனுடையதே" என்று எண்ணிக்கொண்டே நிற்கும் என்னை, உருவமொன்றையே நாடிச்செல்பவனும், புது யௌவநத்தில் புகக்கூடியவனுமான மன்மதன் பாவசையாக்கிவிட்டான்.

பிற்பாடு நான் (அவருக்கு) நமஸ்காரஞ் செய்கையில், மன்மதனுடைய கட்டளை எவராலும் கடக்கமுடியாததாயிருப்பதாலும், மனப்போக்கு நிலையற்றதாகையாலும், அந்த அந்தக் காரியங்கள் அவ்வாறவ்வாறு நடக்கவேண்டியனவாகையாலும், காற்று விளக்கை நிலையிழந்ததாகச் செய்வதுபோல அவரையும் மன்மதன் நிலையிழந்தவராகச் செய்துவிட்டான்.

நானும் அணுக அவகாசம் கிடைத்தவளாய் அடுத்துச் சென்று, அந்தத் தோழரான முனிகுமாரரை (நோக்கி) "பகவானே, என்ன பெயருள்ளவர் இவர்? யாருடையவர் இவர்? எந்த மரத்தின் பூங்கொத்து இவரால் காதில் அணியப்பட்டிருக்கின்றது?" என்று நமஸ்காரபூர்வமாகக் கேட்டேன்.

அம்முனிகுமாரரோ புன்னகைகொண்டு என்னை(ப் பார்த்து) "சுவேதகேது என்ற மாமுனிவர் திவ்வியலோகத்தில் வஸிப்பவராயிருக்கின்றாரல்லவா? கங்கையிலிறங்கிய அவருடைய மூன்றுலகங்களிலும் அழகான உருவத்தை(ப் பார்த்து) அனுபவித்தவளான வெண்டாமரையில் வீற்றிருந்த லக்ஷ்மிதேவிக்கு அப்பொழுதே புண்டரீகன் என்னும் இப் புதல்வன் பிறந்தான். இது பாரிஜாதவிருக்ஷத்தின் பூங்கொத்து. கபிஞ்ஜலன் என்ற நான் இவனுக்குத் தோழன்" என்று மொழிந்தார்.

இவ்வண்ணம் அவர் கூறியபோது, அந்த யுவாவான முனிகுமாரர் (புண்டரீகன்) "இது பெற்றுக்கொள்ளப்பட்ட

டும்" என்று சொல்லி என்னுடைய காதில் அந்தப் பூங்கொத்தை வைத்தார். அவர் அப்பொழுது தம் கையிலிருந்து ஸ்படிக ஜபமாலை நழுவியும் (அதனை) உணரவில்லை. பிறகு நான் அந்த அக்ஷமாலை பூமியில் விழுவதற்கு முன்பாகவே அதனை ஏந்தி (எனது) கழுத்திற்கு ஆபரணமாகச் செய்து கொண்டேன்.

இந்த விஷயம் இவ்வாறாக, "பிரபு குமாரி, தேவியார் நீராடிவிட்டார். ஆதலின் நீராட்டம் செய்யப்படட்டும்" என்ற (எனது) குடைபிடிப்பவளின் வார்த்தையால் நீராட (வாவியில்) இறங்கினேன். கரையேறி அவரையே நினைத்தவளாய்த், தாயாரோடுகூட வெகு பிரயாஸத்துடன் தன் வீட்டை வந்தடைந்தேன்.

பின்னர் ஸூரியமண்டலம் சிவந்தபொழுது (அந்திப் பொழுது) அவருடைய தோழரான கபிஞ்ஜலர் வந்து என்னை(ப் பார்த்து) இங்ஙனம் புகன்றார்—"ராஜகுமாரி, என்ன சொல்வேன். எனது வாக்கே வெட்கத்தால், பேசவேண்டிய விஷயத்தில் இறங்குகின்றதில்லை. ஆம். இவன் (புண்டரீகன்) உன் முன்பிலேயே தடுக்கமுடியாத வேறொரு நிலைமையை மன்மதனால் க்ஷணநேரத்தில் அடைவிக்கப்பட்டானன்றோ? இவனது மன்மதவிகாரம் காலவிளம்பத்தைப் பொறுக்காததாயிருக்கின்றது. மிகவும் இழிவான செய்யத்தகாத தொழிலைக்கொண்டாவது தோழனுயிரைக் காப்பாற்றப்படவேண்டியதாகப் பெரியோர் நினைக்கின்றனர். ஆதலின் இங்கு வந்தேன் நான். இஃது இவ்வாறிருக்கையில் இந்த விஷயத்தில் எது தற்காலத்துக்குரியதோ, எமது வரவுக்கும் ஏற்றதோ, அதில் (அந்தக் காரியத்தைச் செய்ய) நீ (தான்) வல்லமையுள்ளவள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்;

பின்பு ஸூரியன் அஸ்தமித்தபொழுது, நான் என் வெற்றிலைப்பெட்டியெடுப்பவளாகிய தாளிகை என்பவளால் பின்தொடரப்பட்டவளாய், மாளிகையுச்சியிலிருந்து இறங்கி அவர் எந்த இடத்திலிருக்கின்றாரோ அந்த இடத்தைக் குறித்து வந்தேன். தூரதேசமாகையால் நன்றாய்த் தெரியாத ஆண்பிள்ளையினுடையதுபோன்ற அழுகைக்குரலை இந்தத் தடாகத்தின் அம்மேலைக்கரையிலே கேட்டேன்.

“தாளிகையே, என்ன இது?” என்று மொழிந்தவளாய் அதற்கு நேராக வெகு விரைவில் சென்றவளாய், “ஐயோபாழாக்கப்பட்டேனே!ஐயோஎரிக்கப்பட்டேனே!! ஐயோ என்னே இது நேர்ந்தது!!! கண்ணிழந்தவனாய்த் தீர்ந்தேன். திசைகள் எனக்குச் சூன்யங்களாயின.” என்று புலம்பும் கபிஞ்ஜலரைச் செவியுற்றேன். அதனைக் கேட்டதும், வேகமுள்ள அடிவைப்புக்களால் அடிதோறும் இடறியவளாய், அந்த இடத்தை அடைந்து, கபிஞ்ஜலரால் கழுத்தில் கட்டியணைக்கப்பட்டவரும், அந்த க்ஷணத்தில் தான் உயிர் நீங்கியவருமான அந்த மஹாத்மாவைப் பாபஞ்செய்த நான் பார்த்தேன்.

பார்த்ததும், “ஹா அம்மா, ஹா அப்பா, ஹா தோழிகாள்” என்று கூறினவளாய்ப் பிசாசுபிடித்தவளைப் போலப் புலம்பினேன்.

பிறகு எனது நிலைமை மாறுபட்டு இவ்வாறாக, நான் உயிர்துறப்பதிலேயே உறுதியுள்ளவளாய் “அடி, கட்டைகளைக் கொணர்ந்து சிதையை ஏற்படுத்து” என்று தாளிகையை(ப் பார்த்துச்) சொன்னேன்.

இந்த ஸமயத்தில் ஆம்பலைப்போல வெளுத்த தேஹமுள்ள ஒரு புருஷன் சந்திர மண்டலத்திலிருந்து வெளிப்பட்டவனாய் ஆகாசத்தினின்றும் இறங்கி, இறந்த அவரைக் (புண்டரீகனை) கைகளால் !எடுத்துத் தூக்கிக் கொண்டவ

னாய் "குழந்தாய் மஹாசுவேதையே, உயிர் உன்னால் நீக்கத்தக்கதன்று. மறுபடியும் உனக்கு இவரோடு சேர்க்கை நிகழப்போகின்றது" என்று சொல்லிவிட்டு இவருடன் கூடவே ஆகாசத்தை நோக்கி எழும்பிச் சென்றான்.

நானோ பயந்தவளாய் வியப்படைந்தவளாய் "என்ன இது?" என்று கபிஞ்ஜலரை வினவினேன். இவரோ பரபரப்புடன் "துராத்மாவே, எனது தோழனைத் தூக்கிக் கொண்டு எங்குப் போகின்றாய்" என்று சொல்லிக்கொண்டு, மேலே கிளம்பிச் செல்லும் அந்தப் புருஷனையே தொடர்ந்தவராய், ஆகாசத்தை நோக்கிக் கிளம்பிச்சென்றார். நானோ கபிஞ்ஜலர் திரும்பிவருவதிலுள்ள ஆசையினால் அந்தஸமயம் உயிரை விடவில்லை.

(பிறகு நான்) விடியற்காலையில் எழுந்திருந்து அதே பொய்கையில் நீராடி, உறுதி செய்து கொண்டவளாய், அவரிடத்திலுள்ள அன்பினால் அதே கமண்டலுவை எடுத்துக் கொண்டு, 'அம்மாவுரிகளையும் அதே ' அக்ஷமாலையையும் கைக்கொண்டு, பணியாளர்களுடன் உறவினர் கூட்டத்தையும் விடுத்து இந்தக் குஹையிலேயே தரளிகையோடு கூட நீண்ட துன்பத்தை அனுபவிக்கின்றவளாய் நெடு நாளாக வஸிக்கின்றேன்" எனக் கூறிவிட்டு வாய் விட்டு ஊக்கக் கதறினாள்.

சந்திராபீடனோ, அவளுடைய உருவம் வணக்கம் தாக்ஷிண்யம் இனிதாகப்பேசுதல் பற்றில்லாமை தூய்மை ஆகிய இவற்றால் (அவளிடம்) வெகுமதிப்புள்ளவனாய் மெல்லிய தேற்றுமொழிகளால் அவளை நிலைப்படுத்தி, அவள் விரும்பாமலிருந்தும் தான் இருகைகளாலும் கொணர்ந்த அருவிநீரால் அவளைமுகங்கழுவுமாறு வற்புறுத்தி அவ்வாறே செய்வித்தான். "பகவதி, காட்டில் வஸிக்குமாறுள்ள கஷ்டத்திலும் தோழியாய் உங்களுக்குப் பணிவிடை செய்யும்

அந்தத் தாளிகை எங்கேபோயிருக்கிறாள் ? " என்று வினவினான்.

பிறகு அவள் "மஹாபாக்கியவானே, க்ந்தர்வராஜரான சித்திரரதர் என்பவர்க்கு மனைவியான மதிரை என்னும் அப்ஸரஸ்திரீயிடம் காதம்பரி என்ற சிறந்த கன்னிகை பிறந்தாள். அவள் பிறந்ததுமுதல் எனக்கு இரண்டாம்மனம் போன்றவளாய்ச் சின்னஞ்சிறு பிராயம் தொடங்கித் தோழமையுள்ளவள். அவள் என்னுடைய இந்தப் பாழும் செய்தியாலேயே துயரமடைந்தவளாய் 'மஹாசுவேதை துன்பத்தோடிருக்கையில் எவ்விதத்திலும்(ஒருவன்)எனது கையைப் பிடிக்க (மணம்புரிய) விடேன்' என்று உறுதிசெய்துவிட்டாள். சித்திரரதரும் தன் பெண்ணின் உறுதிமொழி முழுவதும் கர்ணபரம்பரையால் தான் அறிந்துகொண்டார். (கொஞ்ச) காலம் செல்லச், சித்திரரதர் அவளை (காதம்பரியை)யௌவனப்பருவமேறியிருப்பவளாகக் கண்டு மதிரையோடு ஆலோசித்து 'காதம்பரியை வழிப்படுத்த நீ (தான்) (எங்களுக்குத்) தஞ்சம்' என்று என்னிடம் சொல்லச்சொல்லிக் கஞ்சுகியை என்னருகு அனுப்பினார். பிறகு 'தோழி காதம்பரி, (நீ) என்னை ஜீவனோடிருப்பவளாக விரும்புகின்றாயெனில், அப்பொழுது பெரியோர் வார்த்தையை வீணாக்காமல் ஒழுகுக' என்று சொல்லச்சொல்லித் தாளிகை கஞ்சுகியோடுகூட (என்னால்) அனுப்பப்பட்டாள்" என்று பகன்றாள்.

பின்பு இரவு குறைந்துபோக, விடியற்காலையிலேயே தாளிகை கேயூரகன் என்ற பெயருள்ள கந்தர்வகுமாரனால் பின்தொடரப்படுகின்றவளாய் வந்து தோன்றினாள். "பிரபு குமாரி, பிரபு குமாரியான காதம்பரி என்னால் பார்க்கப்பட்டாள். (உங்களுடைய) வாய்மொழியையும் தெரிவிக்கப்பட்டாள். அவள் 'தோழி, மஹாசுவேதையே, இந்தத்

தாரிகை (இங்கு) வந்து என்னை (ப் பார்த்து) ஏதோ ஒரு விஷயத்தைச் சொன்னாளே, அதனைப் பற்றிச் சொல்க. இது பெரியோருடைய வார்த்தையைப் பின்பற்றுதலா? அல்லது என்மனத்தைப் பரீக்ஷைசெய்வதா? அன்றேல் கோபமா? ஆதலின் இதோ அஞ்சலி செய்யப்படுகின்றது, இதோ நமஸ்காரம், இதோ கால்களைப்பிடித்தல். என்னை நீ அநுக்கிரஹிக்கவேண்டும். இந்த விஷயத்தை நீ சொப்பனத்திலும் மனதிற்கொள்ளாதே' என்று கூறிவிட்டு மௌனமாயிருந்தாள்'' என்று விண்ணப்பஞ்செய்தாள்.

மஹாசுவேதையோ அதனைக் கேட்டு வெகு நேரம் சிந்தனைசெய்து "போ. நானே நேரில்வந்து தக்கபடி நடத்துகின்றேன்" என்று சொல்லிக் கேயூரகனை அனுப்பினாள்.

கேயூரகன் சென்றபின் "ராஜகுமாரா, ஹேமகூடம் வனப்பு வாய்ந்தது. சித்திரரதரின் இராஜதானி அழகியது. கந்தர்வர்கள் ரஸிகர்கள். காதம்பரி நேர்மையுள்ளமனத்தினள், மிகவும் மஹிமைவாய்ந்தவள். ஆதலின் நீர் இங்கிருந்து என்னோடு கூடவே ஹேமகூடம்சென்று காதம்பரியையும் பார்த்து, ஒரு நாள் தங்கிக் களைப்பாற்றிக்கொண்டு மறுதினம் திரும்பிவரலாம்" என்று சொல்லிய மஹாசுவேதையை (ப் பார்த்து) சந்திராபீடன் "பகவதி, கண்டது முதல் இந்த மனிதன் (நான்) (உங்களுக்கு) அடிமை. விருப்பம் போலக் காரியங்களில் ஏவப்படலாம்" என்று சொல்லிவிட்டு அவளோடுகூடவே நடந்தான்.

சந்திராபீடன் கிரமமாய் ஹேமகூடம்சென்று ராஜகுமாரியிருக்கும் அந்தப்புரத்தினுட்புறம் அடைந்து "அவர் யார்? எவருடைய பிள்ளை? பிராயம் எவ்வளவு? இங்கே வருவாரா" என்று அடிக்கடி தன்னைப் (சந்திராபீடனை) பற்றிய வார்த்தையைக் குறித்துக் கேயூரகனை வினவிக்கொண்டிருக்கின்ற காதம்பரியைக் கண்டான்.

காதம்பரியின் முகமாகிய சந்திரனுடையசோபையைக் கண்ட சந்திராபீடனுடைய மனம், (சந்திரனைக்கண்ட) ஸமுத்திரத்தின் ஜலம்போல எழுச்சியுற்றது. அப்பொழுது "கேயூரகனால்தெரிவிக்கப்பட்டஅவர்இவர்(தாம்)திண்ணம்" என்று சிந்தனைசெய்துகொண்டிருந்த அவளுடைய கண்ணும், சிறந்த ரூபத்தைப் பார்த்ததிலுண்டான வியப்பால் மலர்ந்ததாய் அசைவற்று ஒன்றையே குறிக்கொண்டதாய் அவன்மீது நெடுநேரம் விழுந்தது.

பிறகு, காதம்பரி, வெகு பிரயாஸப்பட்டுச் சில அடிகள் நடந்து அன்புததும்ப, மஹாசுவேதையைத்தழுவினாள். மஹாசுவேதையும், "தோழி, காதம்பரி, பாரதவர்ஷத்தில் தாராபீடர் என்ற அரசர் இருக்கின்றார். அவருடைய புதல்வராகிய இந்தச் சந்திராபீடர், திக்குவிஜயம் செய்துகொண்டுவருகையில் இந்த ஸ்தலத்தை வந்தடைந்தார். பார்த்தது முதல் இவர் இயற்கையாகவே எனக்கு உண்மையான உற்றார்நிலைமையை அடைந்துவிட்டார். பலவகையிலும் (என்) அன்புள்ள தோழி (நீ) (என்னால்) இவர்க்குச் சொல்லப்பட்டிருக்கின்றாள் (ன்றாய்). ஆகையால், இவர் புதிதாகப் பார்க்கப்படுகின்றவர் என்ற வெட்கத்தை விட்டு, ஒழுக்கவிஷயமாக அறியப்படாதவர் என்ற அச்சத்தை அகற்றி, என்னிடம் எப்படியோ அப்படியே இவரிடத்திலும் (உன்னால்) நடந்துகொள்ளப்படவேண்டும். இவர் உனக்குத் தோழரும் பந்துவும் ஆவர்" என்று அந்தக் நாதம்பரியைப் பார்த்துச் சொன்னாள்.

காதம்பரியும் சிருங்காரஸக்குறிகளுடன் நமஸ்காரம் செய்துவிட்டுச் சந்திராபீடனுக்குத் தாம்பூலம் கொடுத்தாள். மற்றொரு தாம்பூலத்தை எடுத்து மஹாசுவேதைக்கு நல்கினாள்.

இந்த ஸமயத்தில் "மஹாசுவேதையே, பிரபு சித்திரரதரும், மதிராதேவியாரும் உம்மைக் காண அழைக்கின்றார்கள்" என்று கஞ்சுகியினால் கூறப்பட்ட மஹாச்வேதை கந்தர்வராஜனைக் காணச் சென்றாள்.

சந்திராபீடனும் அவளோடு கூடவே வெளிப்புறப்பட்டு முன்காணப்பட்ட கேயூரகனால் வழிகாட்டப்பட்டவனாய், விளையாட்டுக் குன்றிலுள்ள இரத்தின மாளிகையை வந்தடைந்தான். இரத்தின மாளிகையுட் சென்றதும் சிறிது நேரம் தங்கியிருந்துவிட்டுப் பிறகு வெளிக்கிளம்பிப் பூங்காவைப் பார்ப்பதிலுள்ள பேராவலால் மனமிழுபட்டவனாய்ச் செய்குன்றின் சிகரத்தைக் குறித்து ஏறிச் சென்றான்.

காதம்பரியோ, மன்மதன் கொள்ளைகொண்ட மனத்தினளாய்(த் தனது) மாளிகையின் மேற்றளத்தில் ஏறிச் சிரித்துக்கொண்டே அந்தச் சந்திராபீடனை நோக்குகின்றவளாய் அவனாலே நோக்கப்படுகின்றவளாய், (இருந்துகொண்டு) கழிந்தநேரம் அதிகமாயிருந்தும் அதனை உணரவில்லை. (பிறகு) வாயிற்காப்பவளால் மஹாசுவேதை திரும்பி வந்ததைத் தெரிவிக்கப்பட்டவளாய் அங்கிருந்திறங்கினாள்.

சந்திராபீடனும் அங்கிருந்து இறங்கி, நீராட்டம் செய்தவனாய், இஷ்டதேவதையைப் பூஜித்தவனாய், (அந்த) விளையாட்டுக் குன்றிலேயே போஜனம் முதலிய பகற்காரியங்களெல்லாவற்றையும் செய்துமுடித்தான்.

முறையே போஜனத்தை முடித்துக்கொண்டவனாய்ச், செய்குன்றின் முன்புறமுள்ள அழகிய மரகதக்கற்பாறையில் உட்கார்ந்தவனாய்க், கன்னிகைகளின் பெரிய கூட்டத்தால் சூழப்பட்டவளும் சந்தனச்சாந்தோடு கூடிய தேங்காயோட்டாலாகிய செப்பொன்றை (கொட்டாங்கச்சிச்சிமிழ்) (க் கையில்) ஏந்திவரும் காதம்பரியின் வாயிற்காப்பவளால்

கைப்பிடிப்பு (கைலாக்) கொடுக்கப்படுகின்றவளும் மூச்சுக் காற்றுகொண்டும் ஒதுங்கக்கூடிய(அவ்வளவு மெல்லிய)இரு வெண்பட்டாடைகளை எடுத்துவரும் கேயூரகனால் வழிகாட்டப்படுகின்றவளும் ஜாதிப்பூமாலைகளைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் தாளிகையால் பின்தொடரப்படுகின்றவளுமாக வரும் காதம்பரியின் தோழியான மதலேகையையும், அவளுடைய ஸமீபத்தில் தாளிகையையும், அவளால் வெளுத்த வஸ்திரம் மேலாக விரித்திருக்கும் ஓர் தட்டத்தில் (தாம்பாளத்தில்) கொண்டுவரப்பட்டதும் ஒளிபெய்கின்றதும் நிரம்பவும் வெண்மையுள்ளதுமான ஒரு முத்து மாலையையும் கண்டான்.

இவன் தூரத்தில் கண்டதுமே, எழுந்தெதிர்கொள்ளல் முதலிய ஏற்ற உபசாரமுறையால் (யில்) வரும் மதலேகையை வரவேற்றான். அவளோ அதே மரகதப்பாறையில் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டுத் தானெழுந்து, அந்தச் சந்தனச் சாந்தினால் (அவனைப்) பூசிவிட்டு அவ்விரு வெண்பட்டாடைகளையும் உடுக்கச்செய்து அந்த ஜாதிப்பூமாலைகளால் கூந்தலணியப்பெற்றவனாக்கி அந்த ஹாரத்தை எடுத்து அவனுடைய மார்பில் சாத்தினாள்.

சந்திராபீடனோ, ஆச்சரியப்பட்டவனாய், காதம்பரியைச் சார்ந்தனவாகவேயுள்ள பேச்சுக்களைக்கொண்டு (பேசிக்கொண்டு) வெகுநேரமிருந்துவிட்டு மதலேகையை அனுப்பினான்.

பிறகு ஸூரியபகவான் மெல்லமெல்ல மறைவடைய, (அஸ்தமிக்க) காலம் (இருளால்) பார்வையைச் செலுத்த முடியாததாக, (ச் சந்திராபீடன்) அதே பாறையில் வெண்பட்டாடை மேற்கட்டியின்கீழ்விரிக்கப்பட்டிருந்த படுக்கையில் படுத்தவனாய் இரவைக் கணநேரம்போலக் கழித்தான்.

பின்னர் ஸூரியன் மேலெழுந்தபொழுது கற்பாறையிலிருந்து எழுந்து சந்திராபீடன் முகங்கழுவியவனாய் ஸந்தியா நமஸ்காரம் செய்தவனாய்க் கந்தர்வராஜகுமாரியைக் (காதம்பரியை) காணவந்தான். மந்தரம் என்னும் மாளிகையின் அடித்தளத்தில் வெளிப்புறமுள்ள வெண்மாடத்தின் மேடையில் மஹாசுவேதையையும், படிக்கப்படுகின்ற எல்லா மங்களங்களுங்கொண்டு பெருமைவாய்ந்த மஹாபாரதத்தில் புத்தியை ஒன்றுபடுத்திச்செலுத்திக்கொண்டிருக்கும் காதம்பரியையும் கண்ணுற்றான்.

அணுகிச் சிறிதுநேரம் இருந்துவிட்டுச் சந்திராபீடன் புறப்பட விருப்பமுள்ளவனாய் "தேவி, என்னசொல்வேன்? மிகப் பேசுபவரை உலகம் நம்புவதில்லை. பரிஜனங்களைப் பற்றிய பிரஸ்தாவங்களில் (நான்) நினைக்கப்படவேண்டியவனாயிருக்கின்றேன்" என்று காதம்பரியைச் சொல்லிவிட்டு, அவளுடைய அன்பு ததும்பிய கண்ணாலும் மனத்தாலும் பிடிக்கப்பட்டவனாய்க் கன்னிகையந்தப்புரத்திலிருந்துவெளியிறங்கி முறையே மஹாசுவேதையின் ஆச்சிரமத்தை அடைந்து, இந்திராயுதத்தின் குளப்படியைப் பின்பற்றியே வந்தவர்களும், அச்சோத தடாகக்கரையில் தங்கியிருப்பவர்களுமான தனது பாளையத்திலுள்ள ஜனங்களால் கும்பிடப்படுகின்றவனாய்த் தனது வீட்டுக்குள் நுழைந்தான்.

மறுநாள் ஸூரியன் எழுந்தபொழுது, வாயிற்காப்பவனுடன்கூடி உட்புறம்வரும் கேயூரகனை முன்பு கண்ணாலும் பின்பு மனத்தாலும் அதற்கும் பிறகு கைகளாலும் இறுகத் தழுவினான். தன்னருகிலேயே உட்காரவும் வைத்தான். இவனே தாமரையிலைப் பொட்டணத்தைத் திறந்து, காதம்பரியால் அனுப்பப்பட்ட ஞாபகப் பொருட்களைக் காட்டினான். "பிரபுவே, கேட்கப்படட்டும்—நீர் வெளிப்புறப்பட்டவுடன்

காதம்பரிதேவி அதே விளையாட்டுப் பர்வதத்தை அடைந்து 'பிரபுவினால் இந்தப் பாறைமீது இருக்கப்பட்டது, இங்கு நீராடப்பட்டது, இங்குப் பகவான் சிவன் பூஜிக்கப்பட்டார். இங்கு உண்ணப்பட்டது, இங்கு உறங்கப்பட்டது' என்று பரிஜனங்களால் பலதடவை சொல்லப்படும் பிரபுவினுடைய (உம்முடைய) இருப்பினடையாளங்களையே காண்கின்றவளாய்ப் பகலைக் கழித்தனள். ஸூரியன் அஸ்தமித்துச் சந்திரன் உதித்ததும், கைகளைக் கன்னங்களில் வைத்துக்கொண்டு என்னவோ சிந்திக்கின்றவளாய்க் கண்களை மூடியவளாய்க் கணநேரம் இருந்துவிட்டு எழுந்து படுக்கையறைக்குச் சென்றாள். படுக்கையில் சரீரத்தைப் போட்டவளாய், மங்கள விளக்குகளுடனும் ஆம்பல் பொய்கைகளுடனும் சேர்ந்து கண்களை மூடாதவளாய் மிகு வருத்தத்துடன் இரவைக் கழித்தாள். விடியற்காலையில் என்னையழைத்து(உமது) செய்தியை அறிந்து வருவதற்காகச் சிறிது மனக்குறையுடன் கட்டளையிட்டாள்'' என்று சொல்லவுஞ்செய்தான்.

சந்திராபீடன் அதனைக் கேட்டுப் புறப்பட விரும்பியவனாய்க் 'குதிரை குதிரை' என்று சொல்கின்றவனாய் வீட்டிலிருந்து வெளிக்கிளம்பினான். ஜேணம் போடப்பட்ட இந்திராயுதத்தின்மீது ஏறி,(த் தனது) பின்புறமாகப் பத்திரலேகையையும் ஏற்றிக்கொண்டு, பாளையத்தில் வைசம்பாயனனை வைத்துவிட்டு ஹேமகூடஞ் சென்றான். காதம்பரிவீட்டு வாயிற்படியை அடைந்ததும் இறங்கி வாயிற்காப்போனிடம் குதிரையைக்கொடுத்தவனாய் உட்சென்று, பூவில்லைப்போல மன்மதனால் † கோடிகுணங்களேற்றப்பட்டு மிக்க அழகாயி

---

† காதம்பரி பக்ஷத்தில்—கோடி குணங்கள்=கோடிக்கணக்கான குணங்கள். சிசிரஹாரிணி=குளிர்ந்த முத்துமாலையுள்ள. வில்பக்ஷத்தில்—கோடி=நுனி, குணம்=நாண்கயிறு. வஸந்ததேவதை பக்ஷத்தில்—சிசிரஹாரிணி=குளிர்ச்சியை நீக்குகின்ற.

ருப்பவளும், வஸந்தகால தேவதையைப்போலச் சிரஹாரி ணியுமான காதம்பரியைக் கண்ணுற்றான்.

பிற்பாடு கேயூரகன் "தேவி, இவள், பிரபு சந்திராபீடருடைய தயைக்குப் பாத்திரமான பத்திரலேகை என்னும் வெற்றிலைப்பெட்டியெடுப்பவள்" என்று கூறிப் பத்திரலேகையைக் காட்டினான். காதம்பரியோ நமஸ்காரஞ்செய்த அவளை ஆதரத்துடன் 'வா வா' என்றுசொல்லித்(அழைத்து) தனது அருகில் உட்காரவைத்தாள்.

சந்திராபீடனும் மஹாசுவேதையோடுகூட அன்பை வளர்ப்பதற்கேற்ப இனியபேச்சுக்களால் வெகுநேரமிருந்துவிட்டுப் பாளையம்போகக் காதம்பரியின் கிருஹத்திலிருந்து வெளிப்புறப்பட்டான். வெளிக்கிளம்பியவனைக் குதிரைமீதேற விரும்பும் (சந்திராபீடனுக்குப்)பின்னால் வந்து கேயூரகன் "பிரபுவே, காதம்பரிதேவி பத்திரலேகையை (நீங்கள் இங்கு) விட்டுவிட்டுப்போக விரும்புகின்றாள். இவள் (பத்திரலேகை)பின்பு வருவாள்" என்று கூறினான்.

கேட்டதும் சந்திராபீடன் "கேயூரகா,(இவள்)அழைத்துக்கொண்டு போகப்படலாம்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் பாளையத்தையே வந்தடைந்தான்.

(பாளையத்தின்) உட்புகுந்தவனாகவே, தகப்பனாருகிலிருந்து வந்திருக்கும் பத்திரிகை கொணர்வோனைக் கண்ணுற்றான். பின்னர் இவன் (திருமுகம் கொண்டுவந்தவன்) அடுத்துச் சென்று நமஸ்காரஞ்செய்தபின் இரு பத்திரிகைகளைக் கொடுத்தான். இளவரசோ, (அவற்றைத்) தலையில் செய்து (வைத்துக்)கொண்டு (பிறகு) தானே அவற்றை அவிழ்த்துமுறையேவாசித்தான்–"க்ஷேமம்.உஜ்ஜயினியிலிருந்து மஹேசுவரபக்தருள் சிறந்த மஹாராஜாதிராஜனான தாராபீடப் பிரபு, ஸகல ஸம்பத்துக்களுக்கும் இருப்பிடமாயுள்ள

சந்திராபீடனை உச்சிமுகந்தவனாய் ஸந்தோஷப்படுத்துகின்றான். பிரஜைகள் க்ஷேமமுள்ளவர்கள். ஆனால் பார்க்கப்பட்ட உனக்குச் (உன்னைப் பார்த்து) சிறிது காலம் சென்றது. நமது மனம் (உன்னைக் காணப்) பலமாக ஆவல்கொண்டிருக்கின்றது. தேவியும் அந்தப்புர ஸ்திரீகளுடன் மனச்சோர்வு அடைவிக்கப்பட்டிருக்கின்றாள். ஆதலின் பத்திரிகை வாசித்து நிறுத்தும் காலமே பயணஸமயமாகச் செய்யப்படவேண்டும்." சுகநாஸனால் அனுப்பப்பட்ட இரண்டாம் (பத்திரிகையிலும்) இதே விஷயம் எழுதப்பட்டிருப்பதாகப் படித்தான்.

பின்னர் "தகப்பனார் எவ்வாறு கட்டளையிடுகின்றாரோ, (அவ்வாறே)" என்று சொல்லி அங்ஙனமே குதிரையேறியவனாய்ப், பயணபேரிகையை அறைவித்தான். அருகிலிருந்த வலாஹகன் பிள்ளையான மேகநாதன் என்பானை (வருமாறு) கட்டளையிட்டான்— "உன்னால் பத்திரலேகையோடுகூட வரப்படவேண்டும். நிச்சயமாய்க் கேயூரகன் அவளை அழைத்துக்கொண்டு இவ்வளவு தூரமுள்ள (இந்த) இடத்திற்கு வருவான்." இவ்வாறு அவனை ஆஜ்ஞாபித்துவிட்டு "உன்னால் [illegible]விட்ட ஸைனியத்தைச் சிரமப்படுத்தாதவனாய் மெல்லமெல்ல வரப்படவேண்டும்" என்று கூறி வைசம்பாயனனைப் பாளையத்தைப் பார்க்கும் பொறுப்பில் ஏற்படுத்தினான். தானும் பயணமானான்.

முறையே சூனியமான (மாஞ்செடி முதலியவொன்றுமில்லாத) காட்டினூடே பகல் முழுதும் நடந்து, ஸூரிய மண்டலம் முதிர்ந்தபொழுது (ஸாயங்காலம்), நெடுநாளாக முளைத்து வேரூன்றி நிற்கும் (ஒரு) செஞ்சந்தன மாத்தினுச்சியில் கட்டப்பட்டிருப்பதும், ஆகாசப்பிரதேசத்தைக் கீறிக்கொண்டிருப்பதுமான பெரிய சிவப்புக்கொடியைத் தூரத்திலேயே கண்டான்.

அதனை எதிர்நோக்கியவனாய்க் கொஞ்சதூரம் வழி நடந்து, கிழப்பூசாரியால் இருந்து நடத்தப்படும் காளி கோயிலைக் கண்ணுற்றான். பிறகு குதிரையிலிருந்து இறங்கி உட்சென்று பக்திக்கு ஈடுபட்ட மனத்துடன் அக்காளி தேவியை நமஸ்கரித்தான்.

ஸூரியன் அஸ்தமனத்தை அடையவே, சந்திராபீடன் பரிஜனங்களால் அங்கேயே இடப்பட்டிருந்த படுக்கையை அடைந்தான். விடியற்காலை எழுந்து, (ஆங்காங்கு) அழகிய இடங்களில் தங்கியவனாய்க் கொஞ்சநாட்களைக்கொண்டே உஜ்ஜயினியை வந்தடைந்தான்.

பின்னர்ச் சிறிது நாட்கள் செல்லவே, மேகநாதன் பத்திரலேகையை அழைத்துக்கொண்டு வந்தான். நமஸ்காரம் செய்த பத்திரலேகையைச் சந்திராபீடன் எழுந்து மிகவும் அன்பு காட்டிக்கொண்டு தழுவினான். உட்கார்ந்தவனாய், "பத்திரலேகையே, சொல்க. மதிப்புக்குரிய மஹாசுவேதைக்கும், மதலேகையோடுகூடிய தேவி காதம்பரிக்கும் க்ஷேமம்தானே? தமாலிகை கேயூரகன் முதலிய எல்லாப் பரிஜனங்களும் க்ஷேமமுள்ளவர்களா?" என்று கூறினான்.

அவள் சொல்லலுற்றாள்— "பிரபுவே, எவ்வாறு கட்டளையிடுகின்றீரோ (அவ்வாறே) க்ஷேமம்(தான்). தோழிகளோடும் பரிஜனங்களோடுங்கூடிய காதம்பரிதேவி அஞ்ஜலியைச் சிரத்தில் வைத்தவளாய் உம்மைப் பூஜிக்கின்றாள். அங்கிருந்து பிரபு (நீர்) சென்றபொழுது, தேவி காதம்பரி என் முகத்தில் பார்வையை வைத்துச் சூடாக நெடுமூச்சு விட்டு, 'பத்திரலேகையே, பிரியத்தால் எனக்கு நீ எந்த நிலைமையில் இருக்கின்றாயோ, அந்தப் பதவியில் (என்) தகப்பனார் இல்லை, தாயார் இல்லை, மஹாசுவேதை இல்லை, மதலேகை இல்லை, உயிர் இல்லை, கண்டதுமுதலே (நீ எனக்

குப்) பிரீதிபாத்திரமாயிருக்கின்றாய். (நான் எனக்கு நேர்ந்திருக்கும்) அவமானத்தை வேறு எவருக்குச்சொல்லப்போகின்றேன். 'என்போன்றவள் (தனது) அடாச் செயலால் வம்சத்தை எப்படிக் கெடுத்துவிடலாம்? கன்னிகைக்குத் தகாத துடுக்கான காரியத்தில் எவ்வாறு மனத்தைச்செலுத்தலாம்? அத்தகைய நான் தகப்பனால் (கொடுப்பதாக) உறுதி செய்யப்படவில்லை, தாயால் கொடுக்கப்படவில்லை. மனவலிமையற்றவளையொப்ப, நாதனில்லாதவளையொப்ப, (நான்) (ராஜ) குமாரர் சந்திராபீடரால் பெரியாரிகழ்ந்து பேசும் நிலைமையை அடைவிக்கப்பட்டேன்' என்று மொழிந்து மௌனமாயிருந்தாள்.

காதம்பரியில் முதற்பாகம் முடிந்தது.

இரண்டாம் பாகம்.

நானோ அதனைக் கேட்டு 'தேவி, தெளிக. வருந்தத் தகாத (நீ) மனவருத்தமுண்டுபண்ணும் கோதிப்பைக் கைக்கொள்ளலாகாது. துயரத்தின் வேகத்தை அடக்குக. இந்த (இதோ) நான் சந்திராபீடரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். திண்ணம்' என்று விண்ணப்பம் செய்தேன்.

'பத்திரலேகையே, நான் உன்னையே பார்க்கின்றவளாய் (உன்னைப் பார்த்தே) உயிரைப் பிடித்துக்கொண்டிருக்கின்றேன். ஆயினும் இஃது உனக்குப் பிடிவாதமாயிருந்தால், அப்பொழுது (உனது) எண்ணத்தை நிறைவேற்றுக' என்று கூறிவிட்டு என்னை அனுப்பிவிட்டாள்.

பிரபுவே, இந்நிலைமையிலுள்ள தேவியாரை அகற்றிவிட்டவரான உம்மாலும், வருந்துவோரிடம் வாத்ஸல்யம்

கொள்ளும் தம் ஸ்வபாவத்துக்கொத்ததாகச் செய்யப்பட்டதாகுமா இது?"

சந்திராபீடனோ, வேண்டுதலுள்ளதும் வெறுப்பு கலந்ததும் அன்புகூடியதுமான காதம்பரியின் அந்த வார்த்தையைக் கேட்டு மிகவும் மனங்கலங்கினவனானான்.

வெகு சிரமத்துடன் சில நாட்கள் கழியவே, ஒரு ஸமயம் கேயூரகன் வந்து "பத்திரலேகையை மேகநாதனிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிவந்த என்னால், உமது இவ்வுஜ்ஜயினிப்பயணச்செய்தி எப்பொழுது தெரிவிக்கப்பட்டதோ, அப்பொழுதே மேல்நோக்கிச் சூடாக நெட்டுயிர்த்து மனச்சோர்வுடன் "இவ்வாறு (தான்) இது" என்று கூறி எழுந்து மஹாஶ்வேதை மீண்டும் தவத்திற்காகத் தன் ஆச்சிரமத்தையே வந்தடைந்தாள். தேவி காதம்பரியும் திடீரென மார்பில் சம்மட்டியால் அடிக்கப்பட்டவள்போலவும், மனத்தால் விடப்பட்டவள்போலவும் (மனமிழந்தவள்போலவும்)உம் நிமித்தமாக மிகுந்த துன்பத்தை அனுபவிக்கின்றாள்" என்று வணக்கத்துடன் சொன்னான்.

இவ்வாறு கேயூரகனால் விண்ணப்பஞ்செய்யப்படவே, சந்திராபீடன் மனத்தெளிவைக் காட்டியவனாய், "கேயூரகா, என்ன நினைக்கின்றாய்? நாம் எவ்வளவு காலத்திற்குள் (அங்குப்) போய்ச்சேருவோமோ, அவ்வளவு காலம்வரை காதம்பரிதேவி உயிர் தரித்திருக்கக்கூடுமா? ஆகையால் தேவியின் உயிர் தங்கிநிற்பதற்காக உன்னால் போகப்படவேண்டும். எனது வரவில் விஶ்வாஸம் ஏற்படுவதற்காகப் பத்திரலேகையும் உன்னோடுகூடவே முன்னதாகத் தேவியின் திருவடியைப் போய்ச் சேரட்டும். பாளையம் தசபுரம் வரை வந்துவிட்டதாக வதந்தி காதில்படுகிறது. ஆதலின் (நீ) இப்பொழுது காரியஸித்தி கையிலிருப்பதாகக் கருதுக.

வைசம்பாயநன் வந்துவிட்டான்" என்று மறுமொழி கூறினான்.

பத்திரலேகை கேயூரகனுடன் வெளிச்செல்லச், சந்திராபீடனும் வைசம்பாயநனை எதிர்கொண்டழைப்பதற்காகத் தன்னை சுகநாஸன் மூலமாகவே (அரமனையிலிருந்து) விடுவித்துக்கொண்டு தசபுரம் செல்லும் வழியால் போகப் புறப்பட்டவனாய், மூன்று யோஜனைதூரம் கடந்து, இராப் பயணத்தில் வந்திருக்கும் பாளையத்தைப் பார்த்தான்.

பின்னர் இந்திராயுதத்தைப் பார்த்து நினைத்தறிந்து கொண்டமையால் "பிரபு சந்திராபீடர்" என்று நான்கு புறமும் பரபரப்புடன் ஓடுகின்றவர்களும், கண்ணீரெழுந்து பார்வை இழந்துள்ள கண்களுள்ளவர்களுமான ஆயிரக்கணக்கான அரசர்களுடைய முகங்களைக்கண்டு பாழ்மனத்தினனாகவே, "எங்கு வைசம்பாயநன்" என்று வினவினான்.

அவர்களும் இவ்வாறு வினவப்பட்டவர்களாய், விண்ணப்பஞ்செய்தார்கள்— "பிரபுவே, பிரபு சென்றபின் மறுநாள் பயணப்பேரிகை அடிக்கப்பட்டபொழுது, விடியற்காலையிலேயே எங்களை (நோக்கி) வைசம்பாயநன் 'அச்சோதம் என்ற தடாகம் மிகுபுனிதமாகப் புராணத்தில் கேட்கப்படுகிறது. அதுபற்றி இதில் ஸ்நாநஞ்செய்து, மஹேசுவர பகவானை அடிபணிந்துவிட்டுச் செல்வோம்' என்று கூறிக் கால்களாலேயே அச்சோத தடாகக்கரையை(க் குறித்துப்) போனான். அங்கு மிகவும் அழகாயிருந்தமையால் எல்லாவிடங்களிலும் பார்வையைச் செலுத்தியவனாகச் சுற்றித் திரிகின்றவனாய், ஒரு கொடிவீட்டைக் கண்ணுற்று (எவராலோ) அசையாவண்ணம் நிறுத்தப்பட்டவனையொப்ப மனத்தால் எதனையோ நினைப்பவனைப்போல மௌனமாகத் தலைகுனிந்தவனாய் நின்றான், வருவதற்காக எங்களால் மீண்

டும் மீண்டும் வற்புறுத்தப்பட்டவனாய், உறுதிகொண்டு கடினமாக (வருமாறு) விளம்பினான்—'என்னாலோ இந்த இடத்திலிருந்து போகமுடியாது. பாளையத்தைக்கூட்டிக்கொண்டு நீங்கள் செல்லுக. இந்த இடத்தில் கணநேரங்கூடத் தங்கியிருப்பது உங்களுக்குத் தகாது.' 'என்ன இது' என்று அவன் செய்தியையே பார்த்தறிகின்றவர்களாய் நாங்கள் மூன்று நாட்கள் இருந்துவிட்டு எண்ணம்வீணானவர்களாய் வந்துவிட்டோம்."

சந்திராபீடனோ, சொப்பனத்திலும் நினைக்கமுடியாத வைசம்பாயநனின் செய்தியைச் செவியுற்றுத் துயரத்தாலும் வியப்பாலும் ஒரே ஸமயத்தில் கைப்பற்றப்பட்ட மனத்தினனாய்ப் பாளைய ஜனங்களோடுகூடவே உஜ்ஜயினியைக் குறித்து வந்தான்.

பின்னர்ப் பற்றொழிந்தவர்களாயிருப்பினும் உதாஸீநர்களாயிருப்பினும் ஸ்நேஹத்துக்கீடுபட்டவர்களாய்ப் பட்டணமிருந்து புறப்பட்ட ஜனங்களால் தாய்தந்தையரைப்போலவும் நண்பர்களைப்போலவும் வருத்தத்துடன் வினவப்படுகின்றதும் சொல்லப்படுகின்றதுமான வைசம்பாயநன் செய்தியையே தூரத்திலேயே எங்கும் செவியுற்றான்.

கேட்கின்றவனாய் (கேட்டுக்கொண்டே) நீர்ததும்பும் கண்ணை மூக்கில் செலுத்தியவனாய், ஒருவிஷயத்தையும் காணாதவனாகவே உஜ்ஜயினியுட்புகுந்தான். உட்சென்று (தன்) தகப்பனாருக்குக்கூட முகத்தைக் காட்ட வெட்கப்படுகின்றவனாய் முகம் குனிந்தவனாகவே தகப்பனாரைச் சுகநாஸனுடன் அடிபணிந்துவிட்டு அந்தப் பகலும் ஒரு இரவும் மிகுபிரயாஸத்துடன் (அங்கு) இருந்தான்.

பின்பு வைசம்பாயநனை அழைத்து வருவதற்காகத் தகப்பனாரால் பிரயாஸத்துடன் அநுமதி அளிக்கப்பட்ட

வனாய்ச் சந்திராபீடன், முன்புறம் கொண்டுவரப்பட்டும் பின்புறம் செல்லும் இந்திராயுதமேறிக்கொண்டு, பசி தாகம் வெயில் களைப்பு விழிப்பு என்பவற்றாலுண்டாகும் நோவை உணராதவனாய்ப் பகலிலும் இரவிலுமாக வழிநடந்தான்.

செல்கின்றவனாய், முன்பு காணப்பட்டதாயிருந்தும் முன்பு காணப்படாததுபோலக் கண்ணுக்கு இன்பமளிக்காததும், துயரத்தை இருமடங்கு செய்கின்றதுமான அதே அச்சோத தடாகத்தை வந்தடைந்தான். “ஒருகால் மஹாசுவேதையும் இந்தச் செய்தியை அறிந்தவளாகவே இருக்கக்கூடும். ஆதலின் அவளைப் பார்க்கின்றேன். பிறகு எற்றவாறு முடிவுகொள்வேன்” என்று மனத்தில் எண்ணி மஹாசுவேதையின் ஆச்சிரமத்தை அடைந்தான். உட்புகுந்து குஹையின் வாயிலிலேயே வெள்ளைக் கற்பாறையில் முகம் தாழ்த்தியவளாய் உட்கார்ந்திருப்பவளும், தரளிகையால் ஒருவாறு சிரமத்துடன் தாங்கப்படும் சரீரத்தையுடையவளுமான மஹாசுவேதையைக் கண்டான். “என்ன இது” என்று தரளிகையை வினவவும் செய்தான்.

பிறகு துக்கவேகம் அடங்காதவளாயிருந்தும் மஹாசுவேதை தொண்டையடைப்புள்ளவளாய் மறுமொழி கூறினாள்— “மஹா பாக்கியவானே, இப்பாழானவள் (நான்) என்ன தெரிவிக்கப்போகின்றாள். கேயூரகனிடமிருந்து உமது பயணத்தைக்கேட்டு மனம் பிளந்தவளாய் (நான்) மீண்டும் மிகக் கடினமான தவம் புரிவதற்காக இவ்விடமே வந்துவிட்டேன். அப்பொழுது இங்கு உருவத்தில் மஹா பாக்கியவானுக்கு (உமக்கு) நிகராகவேயுள்ள யுவாவான ஒரு அந்தணர் என்னை அணுகி, ‘சிறந்த சரீரமுடையவளே, எல்லாருமே உலகில் பிறப்புக்கும் பருவத்துக்கும் உருவத்துக்கும் எற்றதாகக் காரியங்களைச் செய்கின்றவராய்ப் (செய்தால் மாத்திரமே) பழிச்சொல்லை எற்பதில்லை.

உனக்கோ விபரீதமாக நடப்பதில் என் இந்த ஊக்கம்? உன்போன்றவள் ஜீவலோக ஸுகங்களிலிருந்து முகந்திரும்பியவளாய்த் தவத்தால் தன்னை வருத்துவாளேயானால், அப்பொழுது பூவம்பன் நாணேற்றிய (தன்) வில்லை வாளா வுஹிக்கின்றவனாவான்' என்று சொன்னார். (என்னால்) தடுக்கப்பட்டவராயிருந்தும் (அந்தத்) தொடர்ப்பை விடவேயில்லை.

நானோ அதனைக்கேட்டு ஆவேசம் வந்தவளையொப்பத் தன்னையும் அறியாதவளாய்க் கோபவெறியால் கடுமையான வார்த்தைகளாகப் பேசிவிட்டேன்— 'ஆ, பாபி, என்னை இவ்வாறு பேசும் உனது தலையில் இடி ஏன் விழவில்லை. நா ஆயிரம்தூளாக ஏன் சிதறவில்லை. எந்த ஒரு பிரமனால், கிளியைப்போல † முகத்தில் ராகத்தைக் காட்டியவனாய்த் தன் § பக்ஷபாதமொன்றைக் கொண்டே நடக்கின்றவனாயிருக்கும் நீ இவ்வாறு பேசக் கற்பிக்கப்பட்டாயோ, அந்தப் பிரமனால் ஏன் அதேஜாதியில் (நீ) வைக்கப் (பிறப்பிக்கப்) படவில்லை?' என்று மொழிந்துவிட்டு, சந்திரனுக்கு எதிர்முகமாயிருந்து கொண்டு கைகூப்பியவளாய் 'பகவானே, பரமேசுவரா, லோகபாலா, என்னால் புண்டரீகனைக் கண்டதுமுதல் மனத்தால்கூட வேறு புருஷன் நினைக்கப்படாமலிருந்தால், அப்பொழுது இந்த (எனது) உண்மையுரையால் வீணாகக்காமிக்கும் இவன் என்னால் சொல்லப்பட்ட ஜாதியிலேயே விழுவானாக' என்று புகன்றேன். அவனும் எனது இவ்வார்த்தை முடிந்தவுடனேயே வேர் அறுத்த மரம்போலப் பூமியில்

† கிளிப்பக்ஷத்தில், முகத்தில் ராகம் = மூக்கில் சிவப்பு நிறம். வைசம்பாயனன்பக்ஷத்தில், ராகம்=காதற்குறி, அல்லது காதற்பேச்சு.

§ கிளிக்குப் பக்ஷபாதமாவது = இறகுகொண்டு செல்லுதல், அல்லது இறகடித்தல். வைசம்பாயனனுக்குப் பக்ஷபாதமென்றால் ஸ்னேஹமென்பது பொருள்.

வீழ்ந்தான். இவன் உயிர் நீங்கியவனாகவே, அழுதுகொண்டிருந்த பரிஜனங்களிடமிருந்து 'இவன் மஹா பாக்கியவானுடைய (உம்முடைய) நண்பனே ஆவன்' என்பதைக் கேட்டறிந்தேன்" என்று சொல்லிவிட்டு வெட்கத்தால் முகத்தைத் தாழ்த்தியவளாய் மௌனமாகவே கண்ணீர்ப் பெருக்கினால் தரையை நனைத்தனள்.

அதனைக் கேட்டதும் "பகவதி, பகவதி (நீர்) முயற்சி எடுத்துக்கொண்டிருந்தும் புண்ணியம் புரியாத என்னால் இந்த ஜன்மத்தில் காதம்பரிதேவியின் பழக்கத்தால் ஏற்படும் இன்பம் அடையப்படவில்லை. அது ஜன்மாந்தரத்திலாவது உண்டாவதாக" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே சந்திராபீடனுடைய இயற்கையில் மெல்லிய நெஞ்சம் வெடித்தது.

பின்னர்த் தரளிகை பரபரப்புடன் சந்திராபீடனுடைய சரீரத்தைத் தாங்கிநிற்க, மஹாசுவேதை தலையைச் சிறிது சாய்த்துச் சந்திராபீடனுடைய முகத்தில் தனது கண்ணை அசைவற்றுச் செலுத்திக்கொண்டு செயலற்றிருக்க, "ஆ, பாபீ, துஷ்டதாபஸீ, இஃது என்ன உன்னால் செய்யப்பட்டது' என்று பரிஜனங்கள் கதற, இந்திராயுதம் சந்திராபீடனுடைய முகத்தில் பார்வையைச் செலுத்தியதாய்க் குதிரைத் தன்மையைவிட விரும்புவதுபோலிருக்க, பத்திரலேகையால் சந்திராபீடனுடைய வரவை அறிவிக்கப்பட்டவளான காதம்பரி, சந்திராபீடனைக் காண்பதற்குத் துடிதுடிக்கின்றவளாய் மஹாசுவேதையின் தரிசனத்தை வியாஜமாகக் கொண்டு, கேயூரகனால் வழிகாட்டப்படுகின்றவளாய்ப் பத்திரலேகையோடும் மதலேகையோடும்கூட அங்கேயேவந்து சேர்ந்தாள்.

வந்ததும், (காதம்பரி) அமுதம் எடுத்துவிட்ட ஸமுத்திரத்தைப் போலவும், கர்ணிகையைப் பறித்தெடுத்த தாம

ரைப் பூவைப்போலவுமுள்ள உயிர்நீத்த சந்திராபீடனைப் பார்த்துத் திடீரென "ஆ! ஆ!! என்னே இது" என்று முகம் குனிந்தவளாய்த் தரையை அடைகின்றவளாய் (குனிந்த வண்ணமே தரையில் விழுபவளாய்) மிகு பிரயாஸத்துடன் மதலேகையால் தாங்கப்பட்டாள்.

வெகுநேரம் கழித்துப் பிரஜ்ஞைவந்த காதம்பரி, மஹா சுவேதையைக் கழுத்தில் தழுவிக்கொண்டு "வ் அன்புள்ள தோழி, உனக்கு ஏதோ ஒருமாதிரி (சிறிதாவது) நம்புதல் இருக்கின்றது. பலவிதத்திலும் பாழாய்ப்போன எனக்கோ அதுவுமில்லை. நானோ இந்த ஆத்மாவை அக்கினியில் களி (நசி)ப்பிக்கின்றேன். ஆகையால், மீண்டும் மறுபிறப்பில் சேர்வதற்காக அன்புள்ள தோழியிடம் விடைபெற்றுக் கொள்கின்றேன்" என்று புகன்று சந்திராபீடனுடைய கால்களை(த் தன்) கைகளால் எடுத்து மடியினால் (யில்) வஹித்தாள்.

பிறகு அவள் கைகொண்டு தொட்டதினால் உயிர்த்தது போல் தோன்றிய சந்திராபீடனுடைய உடம்பிலிருந்து சந்திரன்போல வெளுப்புள்ள ஓர் ஒளி உயரக்கிளம்பிற்று. அடுத்த நிமிஷமே ஆகாசத்தில் அசரீரி வாக்கு கேட்கப்பட்டது—"குழந்தாய் மஹாசுவேதையே, மறுபடியும் நீ என்னாலேயே தேற்றப்படவேண்டியவளாயிருக்கின்றாய். அந்த உனது புண்டரீகனுடைய உடல் என்னுலகில் எனது தேஜஸினால் போஷிக்கப்படுகின்றதாய் அழிவற்றதாய் மீண்டும் உன்னுடன் சேர்வதற்காகவே இருக்கின்றது. சாபத்தால் ஆவியகன்றதாயிருப்பினும் என் தேஜோமயமாய் சுவயமாகவே அழிவற்ற இந்தச் சந்திராபீடனின் சரீரம், உங்களிருவர்க்கும் விசுவாஸம் வருவதற்காகச் சாபம் முடியும் வரை இங்குத்தானே இருக்கட்டும். சேர்க்கை நேரும்வரை (இது) ஊக்கத்துடன் காப்பாற்றப்படவேண்டும்."

(மூர்ச்சையுற்றுத் தரையில்கிடந்த) பத்திரலேகையோ அவ்வொளியின் அந்தப் பரிசத்தால் உணர்வு பெற்றவளாய் எழுந்து பரிவர்த்தகனுடைய கையிலிருந்து இந்திராயுதத்தை வலித்திழுத்துக்கொண்டு அதனோடுகூடவே தன்னை அச்சோத தடாகத்தில் தள்ளினாள்.

பிறகு அவ்விருவரும் முழுகிய உடனேயே அந்தத் தடாகத்திலிருந்து துன்பப்படுமுருவமுள்ள (ஒரு) ருஷி குமாரன் திடீரென மேலெழுந்தான். எழுந்ததும், தூரத்திலிருந்தே கண்டுகொண்டிருக்கின்ற மஹாசுவேதையை அணுகி "கந்தர்வராஜகுமாரி, இந்த மனிதன் (நான்) இன்னானென்று அறியப்படுகின்றானா, இல்லையா" என்று கேட்டான். இவவாறு கேட்கப்பட்ட அவளோ துன்பத்திற்கும் இன்பத்திற்கும் இடையிற்பட்டவளாய் காலில் விழுந்தவளாய் "பகவானே, கபிஞ்ஜலரே, எப்படிப்பட்டவளாயிருப்பின் நான் உம்மைக்கூட இன்னாரென்று அறியமுடியாதவளாவேனோ, அப்படிப்பட்ட பாபியன்று நான். சொல்க—எவனால் இவர் (புண்டரீகன்) தூக்கிக்கொண்டு போகப்பட்டார்? என்ன உமக்கு நேர்ந்தது? பிரபு புண்டரீகரைவிட்டு நீர் தனித்து ஏன் வந்தீர்?" என்று மறுமொழி கூறினாள்.

அவனோ மறுமொழி (வருமாறு) சொல்லலானான்—"கேட்கப்படட்டும்—நானோ உன்னைத் தனிமையில் விட்டுவிட்டு அந்த மனிதனைப் பின்தொடர்ந்தவனாய், விரைவில் உயரக்கிளம்பினேன். அவனோ எனக்கு மறுமொழி கூறாமலேயே சந்திரலோகம் சென்றான். அங்கே மஹோதயை என்ற பெயருள்ள ஸபையில் சந்திரகாந்தக் கற்களாலாகிய கட்டிலில் அந்தப் புண்டரீகனுடைய சரீரத்தை வைத்துவிட்டு என்னை(க் குறித்துச்) சொன்னதாவது—'கபிஞ்ஜலா, என்னைச் சந்திரனாகத் தெரிந்துகொள்க. காமக்குற்றத்தால்

ஆவிதுறந்த இந்த உன் அன்புள்ள தோழனால் 'துராத்மா வான பாழான சந்திரனே, எவ்வாறு நான் உன்னால் உயிர் விட்டவனாக்கப்பட்டேனோ, அவ்வாறே நீயும் பாரதவர்ஷத் தில் ஜன்மஜன்மங்களாகவே காதலுடையவனாய்ச் சேர்க்கை யின்பம் கிட்டாதவனாய் வெகு கடினமான மனவேதனையை அநுபவித்துவிட்டு ஆவியை நீப்பாயாக' என்று குற்றமற்ற நான் சபிக்கப்பட்டேன். நானும் கோபம் பிறந்தவனாய் 'ஸுகதுக்கங்களில் என்போன்றவனாயே நீயும் ஆகுக' என்று இவனுக்கு மறுசாபம் கொடுத்தேன். கோபம் நீங்கியவ னான (நான்) ஆராய்ந்தவனாய் இவனுக்கு மஹாசுவேதை யோடுள்ள ஸம்பந்தத்தை அறிந்தவனானேன். இவனால், தானே செய்த குற்றத்தால் என்னோடுகூட மானிடவுலகில் இருதடவை பிறக்கப்படவேண்டும். ஆதலின், இவன் எதற் குள் சாபத்திலிருந்து விடுபடுவானோ, அதற்குள் இந்த உட லுக்கு அழிவு நேரிடலாகாது என்று (நினைத்து) என்னால் இது எடுத்துக்கொண்டுவரப்பட்டது. இந்த அச்சரீரம் எனது தேஜஸினால் போஷிக்கப்படுகின்றதாய்ச் சாபம் நீங் கும்வரை (இங்கு) இருக்கும். இப்பொழுது நீ போய் இந் தச் செய்தியை சுவேதகேதுவுக்குத் தெரியப்படுத்துக. பெரிய மஹிமைவாய்ந்த இவர் ஒருகால் இவ்விஷயத்தில் ஏதாவதொரு பரிகாரத்தைச் செய்யக்கூடும்' என்றுசொல்லி விட்டு என்னை அனுப்பினான்.

நானோ துக்கமேலீட்டால் அறிவிழந்தவனாய் வானோர் வழியில் (ஆகாசத்தில்) விமானமேறிச் செல்லுமொருவரைத் தாண்டிவிட்டேன். அவரோஎன்னை எரித்துவிடுபவர்போலப் பார்த்து 'துராத்மாவே, குதிரையைப்போலத் தங்குதடை யில்லாமல் திரியும் உன்னால் நான் எக்காரணம் பற்றித் தாண் டப்பட்டேனோ, அக்காரணங்கொண்டு (நீ) குதிரையாகவே தீர்ந்து பூலோகத்தில் பிறப்பாயாக' என்று சொன்னார். 'பக

வானே, நண்பன் துயரத்தால் மதியிழந்த என்னால் நீர் தாண்டப்பட்டீர், அவமதிப்பாலன்று. ஆதலின் கருணைபுரிக. சாபத்தைத் திருப்புங்கள்' என்று கை கூப்பியவனான என்னால் வேண்டிக்கொள்ளப்பட்ட அவரோ என்னை(ப்பார்த்து) மீண்டும் சொன்னதாவது—'எது என்னால் சொல்லப்பட்டதோ, அது மாறுபடக் கூடியதன்று. ஆதலின் இது செய்கின்றேன்—சிறிது காலம் (நீ) எவனுக்கு வாஹநமாகும் நிலைமையை அடையப் போகின்றாயோ, அவனுடைய முடிவில் (நீ)ரோடி சாபம் முடிந்தவனாவாய். மேலும், உஜ்ஜயினியில் குழந்தை நிமித்தம் தவம்புரியும் தாராபீடனுக்குப் பிள்ளையாயிருக்குந்தன்மை சந்திரனால் அடையப்படவேண்டும். உனது நண்பனான புண்டரீகனாலும் அவன் (தாராபீடன்) மந்திரியான சுகநாஸனுக்கு (ப் பிள்ளையாயிருக்குந் தன்மை அடையப்பட வேண்டும்). நீயும் சந்திரஸ்வரூபியான ராஜகுமாரனுக்கு வாஹநமாகுந்தன்மையை அடைவாயாக'. நானோ அவருடைய வார்த்தை முடிந்தவுடனேயே கீழேயுள்ள மஹாஸமுத்திரத்தில் விழுந்தேன். அதினின்றும் குதிரையாகியே மேலே எழுந்தேன். குதிரை நிலைமையிலும் எனக்கு முன்னறிவு நீங்கவில்லை.”

பிற்பாடு காதம்பரி “பகவானே பத்திரலேகையாலும் உம்மாலும் இந்தத் தடாகத்தில் ஜலத்தினுட்புகப்பட்டது. ஆதலின், அப்பத்திரலேகைக்கு என்ன நேர்ந்தது?” என்று கபிஞ்ஜலனை வினவினாள். அவனோ “ராஜகுமாரி, ஜலத்தில் விழுந்த பிறகு அவள் செய்தியீதொன்றும் என்னால் தெரிந்து கொள்ளப்படவில்லை. ஆகையால் இப்பொழுது சந்திராபீடனுடைய பிறவி எங்கே? வைசம்பாயனனுடைய (பிறப்பு) எங்கே? பத்திரலேகையின் செய்தி என்ன? என்ற இவ்வெல்லா விஷயங்களையும் அறிவதற்காக நான் தகப்பனாகிய சுவேதகேதுவின் திருவடியருகு செல்கின்றேன்”

என்று கூறுகிறவனாகவே ஆகாசத்தைக்குறித்து எழும்பிச் சென்றான்.

பின்னர்க் காதம்பரி வருத்தத் தகாத அந்தச் சந்திராபீடனுடைய உடம்பை ஒருகற்பாறையில் மெல்ல வைத்து நீராட்டத்தால் தூயவளாயிருந்துகொண்டு தேவதைக்குரிய பூசனையைச் செய்து, உண்ணாதவளாய் அந்தப் பகலையும் இரவையும் கழித்தனள். விடியற்காலையில் வண்ணம்தீட்டிப் புதிதாக்கிய ஓவியம்போலிருந்த அந்தச்சந்திராபீடனுடைய சரீரத்தைப் பார்த்துக் கையால் தடவியவளாய் "அந்த (அசரீரி) வாக்கும், கபிஞ்ஜலர் தெரிவித்த சாபச்செய்தியும் உண்மையுள்ளன" என்று களிப்புள்ள மனத்துடன் இருந்தாள்.

பிற்பாடு இளவரசன் (திரும்பிவரத்) தாமதிக்கின்றான் என்று வாட்டமடைந்த மனத்துடன் பிரபு தாராபீடனால் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். மேகநாதனால் உட்புறம் அழைத்துவரப்பட்ட அவர்களைக் காதம்பரி மற்றொன்றிலும் பார்வையைச் செலுத்தாதவளாய்ப் பார்த்துவிட்டு "நல்லவர்களே, துக்கவேகம் விடப்படட்டும். முன்போலவே சரீரம் கேடுறாத பிரபுவினுடைய முகம் உங்களாலும் காணப்பட்டதல்லவா? ஆகையால் (உங்களால்) செய்தியறிய மனத்தில் ஆவல்கொண்ட பிரபுவினுடைய (தாராபீடனுடைய) திருவடியருகு செல்லப்படலாம். உண்மையான செய்தி கூறப்படவேண்டும். ஆனால் நம்பத்தக்க பேச்சையுடைய மற்றொருவனும் விசுவாஸம் வருவதற்காக உங்களோடுகூடச் செல்லவேண்டும்" என்று ஆஜ்ஞைசெய்து விட்டுச் சந்திராபீடனுக்குப் பாலப்பருவ முதற்கொண்டு தொண்டுபுரியும் துவரிதகன் என்பானைக் கூப்பிட்டு அவர்களுடன் அனுப்பினாள். பிறகு துவரிதகன் தூதர்களுடன் வந்து தாராபீடனுக்கு(த் தாங்கள்) போனதுமுதல் நடந்த

படி சொல்லத்தொடங்கினன். "பிரபுவே, நெஞ்சு உடைந்து போனபோதிலும் சரீரங்கொண்டு இளவரசர் இருக்கின்றார். (சரீரம் அழியவில்லை) சாபத்தால் வைசம்பாயனருக்கும் இளவாசருக்கும் ஜன்மம் எவ்விதம் (ஏற்பட்டதோ) அவ்விதம் முழுதும் பிரபு கேட்கவேண்டும்." என்று விண்ணப்பமும் செய்தான்.

தாராபீடனே, அந்த ஆச்சரியத்தைச் செவியுற்று, காணப்பட்டவாறும் கேட்கப்பட்டவாறும் அவனால் மிகுதியில்லாதபடி சொல்லப்படுகின்ற அவ்வெல்லா விஷயங்களையும் மனமிருத்தியவனாய்க் கேட்டான். அந்தச் செய்தியைக் கேட்டதும் "உயிர் தரித்திருப்பதற்கு (அங்குப்) போவதையொழித்து வேறுவழி கிடையாதென்று உறுதி செய்துகொண்டு, சுகநாஸன் விலாஸவதி மனோரமை என்ற இவர்களோடு கூடி, எப்பொழுதும் இடைவிடாப் பயணங்கள்கொண்டு செல்கின்றவனாய்ச் சிறிது நாட்களாலேயே அச்சோத வாவியை அடைந்தான்.

பின்பு திடீரெனச் சந்திராபீடனின் பெரியார்களுடைய அவ்வரவைக் கேட்டு, மஹாசுவேதை வெட்கத்தால் ஓடி குகையினுட்புறம் புகுந்தாள். காதம்பரியும் மயக்கவிருளுட்பட்டாள். இவ்விருவரும் இந்நிலைமையிலிருக்கச் சுகநாஸனால் தாங்கிப்பிடிக்கப்பட்ட சரீரமுள்ளவனாய் அரசன், ஆச்சிரம ஸ்தலத்தினுட்சென்றான். பிறகு மனோரமையால் தாங்கப்பட்டவளாய் விலாஸவதி (ஆச்சிரமஸ்தலத்தினுட் சென்றாள்). உட்சென்றதும் அரசன், இயற்கையிலுள்ள காந்தி அகலாதவனும் எல்லாச் செயல்களுமடங்கியிருப்பவனும் தூங்குபவன்போலிருப்பவனுமான புதல்வனைப் பார்த்துவிட்டுச் சந்திராபீடனை மீண்டும் உயிர்த்தவனாகவே நினைக்கின்றவனாய்ப் பரிவாரங்களோடுகூடியவனாய்த் தேவியோடும் சுகநாஸனோடும்கூடி அங்குத்தானே இருந்தான்.

ஆகையால் காமத்தால் மனமழிந்த எவனொருவன், தானே செய்த அடக்கமில்லாச் செயலால் திவ்விய லோகத்திலிருந்து நழுவி மானிடவுலகத்தில் வைசம்பாயநன் என்ற பெயருள்ள சுகநாஸன் புதல்வனாக ஆனானோ, அதே இவன் மீண்டும் தான் பண்ணின அடாச்செயலாலும், மஹாசுவேதைகொண்ட உண்மையுணர்ச்சியாலும் இந்த (இவ்வாறு) சுகஜாதியில் விழுந்தான்.

பகவான் ஜாபாலி இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, பாலப்பருவத்திலும் எனக்குத் தூங்கி விழித்தவனுக்கு வருவனபோல எல்லா வித்தைகளுமே நாவின் நுனியில் வந்துதோன்றின. மனித சரீரமொன்றைத் தவிர்த்து, மஹாசுவேதையிடம் காதல் முதலிய மற்றெல்லா விஷயங்களும் அந்த க்ஷணமே என் நினைவிற்குவந்தன.

பிற்பாடு ஜாபாலி பகவான் "இரஸம் (நம்மை) இழுத்துக்கொண்டமையால், நம்மால் அறியப்படாததாகவே இரவு பெரிதும் வெளுத்துவிட்டது. அக்கினியை வழிபடவேண்டிய வேளை நெருங்கிவிட்டது" என்று கூறுகின்றவராகவே கூட்டத்தைக் கலைத்துவிட்டு எழுந்தார்.

பிறகு பகவான் ஜாபாலி எழுந்தவுடன் விடியற்காலை, செய்நன்றி மறப்பவனும் பெரியார் வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவனும் துராத்மாவுமான நான், செய்நன்றியறிவுள்ளவனும் பெரியாரின் வார்த்தைப்படி நடப்பவனும் மஹாத்மாவுமான கபிஞ்ஜலனை ஹாரீதனோடுகூட வரக்கண்டேன். கண்டதும் "தகப்பனாருக்கு க்ஷேமமா? என் செய்தியைக் கேட்டு என்ன சொன்னார்? கோபித்துக் கொண்டாரா இல்லையா?" என்று அவனை(ப் பார்த்துச்) சொன்னேன். அவன் இவ்வாறு (வருமாறு) கூறினான்— "தோழா, தகப்பனாருக்கு க்ஷேமம். இந்த நமது செய்தி முன்னதாகவே தகப்பனா

ரால் திவ்வியக் கண்ணால் (ஞான திருஷ்டியால்) காணப்பட்டது. பரிஹாரத்தின்பொருட்டுக் காரியம் தொடங்கப்பட்டுவிட்டது. கர்மம் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே குதிரைத் தன்மையிலிருந்து விடுபட்டவனாய்த் தகப்பனாருடைய திருவடியருகு சென்றேன். அவரும் இன்று விடியற்காலையிலேயே என்னை அழைத்துக் (வருமாறு) கட்டளையிட்டார்— 'குழந்தாய் கபிஞ்ஜலா, உன் நண்பன் ஜாபாலி மாமுனிவருடைய ஆச்சிரமஸ்தலத்தை அடைந்திருக்கின்றான். முற்பிறவி நினைவும் இவனுக்கு உண்டாயிருக்கிறது. ஆகையால் (நீ) அவனைக் காண இப்பொழுது போ. என்னுடையதான ஆசியால் அநுக்கிரஹஞ் செய்துவிட்டு இவன் (வருமாறு) சொல்லப்படவேண்டும்— குழந்தாய், எதற்குள் இந்தக் கர்மம் முடிக்கப்படுமோ, அதுவரை உன்னால் இந்த ஜாபாலியின் திருவடி நிழலிலேயே தங்கியிருக்கப்படவேண்டும்.' மேலும் உன் துக்கத்தால் துயருற்ற உனது அன்னை லக்ஷ்மியும் அதே கர்மத்தில் ஏவற்காரியாயிருக்கின்றாள். அவளாலும் உச்சிமுகந்து இதுவே மீண்டும் மீண்டும் (உன்னிடம்) சொல்லும்படி கூறப்பட்டது" என்று சொல்லிவிட்டு ஆகாசத்தைத் தாண்டி எங்கோ மறைந்துவிட்டான்.

நானோ சில நாட்களைக்கொண்டே பறந்துசெல்லும் வல்லமை பெற்றவனாய் "(நான்) செல்லச் சக்தியுள்ளவனாயிருக்கின்றேன். சந்திராபீடனுடைய பிறப்பைப் பற்றிய அறிவு (எனக்கு) இல்லாமற்போனால் போகட்டும். மஹாசுவேதையோ (இப்பொழுதும்) அன்னவளாகத்தானே இருக்கின்றாள். இருக்கட்டும், அங்குத் தானே சென்று இருக்கின்றேன்" என்று உறுதிபூண்டு ஒருகால் விடியற்காலை ஆஹாரந்தேடப்போகக் கிளம்பியவனாகவே வடதிசையைப் பற்றிக்கொண்டு சென்றேன். (பறந்து) செல்லும் பழக்கம் ஏற்பட்டு அதிக நாட்களாகாமையால் கொஞ்சம் போன

வுடனேயே இறகுகளுடைய அடிப்பாகங்கள் தளர்ந்துபோனவனாய்ப் பரவசனாக வாவிக்கரை மரங்களின் ஓர் அடர்ப்பின்மீது தன் (என்)சரீரத்தைப் போட்டேன். வழிக்களைப்பால் வரக்கூடிய உறக்கத்தையும் அடைந்தேன். நெடுநேரம் கழித்து உணர்ந்தவனாய்க் கழற்றமுடியாத சுருக்குக்கயிறுகளால் கட்டப்பட்டிருக்கும் தன்னையும் (என்னையும்) முன்பில் பாசமில்லா யமபுருஷனைப்போலப் பயங்கரனாயிருக்கும் ஒரு மனிதனையும் கண்டேன்.

அந்தச் சண்டாளஜாதியான் என்னை எடுத்துக்கொண்டு சேரிக்குக் கொண்டுபோய்ச் சண்டாள கன்னிகையொருத்திக்குக் காட்டினான். அவளோ மிகவும் மகிழ்வுற்ற முகத்தினளாய் "ஆ, குழந்தாய், வந்துவிட்டாய்" என்று சொல்கின்றவளாகவே மரக்கூட்டில் என்னை (அடைத்து)வைத்து அதன் வாயிலைத் தாளிட்டுவிட்டு மௌனமாயிருந்தாள்.

நானோ உயிர்துறப்பதைப்பற்றி உறுதிசெய்தவனாய் மௌனம் கொண்டேன். நீரும் உணவும் கொண்டுவரப்பட்டும் அந்தப் பகலை உண்ணாமைகொண்டே கழித்தேன். மறுநாள் உண்ணும்நேரம் கடக்க, அவள் தன் கையினால் பற்பல பழங்களையும் மணமும் குளிர்ச்சியுமுள்ள பருகுநீரையும் கொணர்ந்து "பசியாலும் நீர்விடாயாலும் வருந்தும் விலங்குகளும் பறவைகளும் கவலையற்ற மனப்போக்குடையனவாயிருந்துகொண்டு கிடைத்த ஆஹாரங்களை (உபயோகிக்கவேண்டியிருக்க அப்படி)உபயோகிக்காதிருப்பது கூடவேகூடாது. ஆகையால் ஏன் (நீ) பசியாலும் தாகத்தாலும் தன்னை (உன்னை) விழச்செய்கின்றாய்" என்று நேசிப்பவளையொப்பப் பேசினாள். நானோ அவளுடைய அம்மொழியாலும் பகுத்தறிவாலும் மனத்தில் வியப்படைந்தவனாய்ப் பசிதாகங்கள் தீர ஆஹாரமெடுத்துக்கொண்டேன். மௌனத்தைமட்டும் விடவில்லை.

இவ்வாறு காலம் செல்ல ஒருஸமயம் இரவு புலர்ந்த பொழுது கண்களைத் திறந்தவனாய்த் தன்னை (என்னை) இந்தத் தங்கக்கூட்டில் இருப்பவனாகக் கண்டேன். அந்தச் சேரி முழுதும் தேவநகரத்திற்கு நிகராயிருக்கக் கண்டு "இஃது என்ன" என்று ஆவலால் வினவ விரும்பியவனாய் மௌனத்தை விடாமலிருக்கும்பொழுதே (மௌனத்தை விட்டுக் கேட்பதற்குள்) இவள் என்னை எடுத்துக்கொண்டு பிரபுவின் (உமது) திருவடியருகு வந்துவிட்டாள். ஆகையால், யாவள் இவள்? எதற்காக நான் கட்டப்பட்டேன்? (பிடித்துக் கூட்டில் அடைக்கப்பட்டேன்) கட்டப்பட்டாலும் எதற்காக இங்குக் கொண்டுவரப்பட்டேன்? என்ற இவ்விஷயத்தில் நானும் பிரபுவை (உம்மை)ப் போலவே ஆவல் தீராதவன்தான்" என்று மொழிந்துவிட்டு வைசம்பாயனக் கிளி ஓய்ந்தது.

சூத்திரகனோ அதைக் கேட்டு(முன்னிலும்)அதிகமான ஆவல் பிறந்தவனாய் அவளை அழைத்துவருவதற்காக வாயிற்காப்பவளைக் கட்டளையிட்டான். உடனேயே அவள் உட்சென்று சொன்னதாவது— "உலகத்துக்கு அலங்காரமாயிருக்கும் சந்திரனே, துர்ப்புத்தியுள்ள இவனுடையவும் தன்னுடையவும் (உன்னுடையவும்) முற்பிறவிச்செய்திமுழுதும் உன்னால் கேட்கப்பட்டதுதானே. நான் துராத்மாவான இவனுடைய தாயாரான லக்ஷ்மி. இந்த ஜன்மத்திலும் இவனை வதுவினருகு (மஹாசுவேதை ஸமீபம்)செல்லப்புறப்பட்டனாகத் திவ்விய கண்ணால்கண்டு இவனுடைய பிதாவினால் (வருமாறு) ஆஜ்ஞாபிக்கப்பட்டேன்— 'கெட்டவழியில் நடக்கும் எவனும் பச்சாத்தாபம் பிறவாவிடின் திரும்பமாட்டான். ஆகையால் இந்தக் கர்மம் எப்பொழுது முடியுமோ, அதுவரை இவனை மானிடவுலகிலேயே கட்டிப்பிடித்துவை. இவனுக்கு எப்படிப் பச்சாத்தாபம் உண்டா

குமோ, அப்படி இவனுக்குத் தக்கவாறு காரியம் செய்யப்படவேண்டும்.' ஆதலின் இவனுக்கு அடக்கம் பிறக்கவே இஃது என்னால் செய்யப்பட்டது. இப்பொழுது அந்தக் கர்மம் முழுதும் முடிந்துவிட்டது. சாபத்தின் முடிவுக்காலம் நிகழ்கின்றது. சாபமுடிவில் உங்களிருவர்க்கும் ஒரேமாதிரி ஸ்நேகம் உண்டாகவேண்டுமென்று (நினைத்து) உலகுக்கு இவன் கொண்டுவரப்பட்டான். உலகத்தாரோடு சேர்க்கையற்றிருக்கவே என்னால் தனக்குச் (எனக்கு) சண்டாள ஜாதி வெளிக்காட்டிக்கொள்ளப்பட்டது. ஆகையால் இப்பொழுது (நீங்கள்) இருவரும் ஒரேமாதிரி பிறவி மூப்பு பிணி சாவு முதலிய துன்பம் நிறைந்த சரீரங்களைவிட்டுவிட்டு அன்பார்ந்த மனிதர்களுடன் சேருமின்பத்தை அநுபவிக்க" என்று சொல்கின்றவளாகவே (சொல்லிக்கொண்டே) திடீரெனப் பூமியிலிருந்து ஆகாசத்தைநோக்கிக் கிளம்பிச் சென்றாள்.

பின்னர் அந்த வார்த்தையைக்கேட்டு ஜன்மாந்தரத்தை நினைத்தவனாய்த் தேஹம் கட்டையிட்டவனாயிருக்கும் அரசனுக்குக் (சூத்திரகனுக்கு) காமத்தீ, உடனேயே மேல் நிலையை ஏறிவிட்டது; அரசனைப்போலவே நிலைமைபெற்ற புண்டரீகஸ்வரூபியான வைசம்பாயநனுக்கும் மஹாசவேதைமீதுள்ள ஆவலால் (காமத்தீ மேல்நிலையை ஏறிவிட்டது)

அதே ஸமயத்தில் அக்காமத்தீயை நன்கெரியச் செய்வதற்கு வந்தாற்போல ஜீவலோகம் முழுதையுமே அநுராகமயம்போலாக்கிக்கொண்டு வஸந்தமாஸம் வந்தது. காதம்பரியும் மனச்சாஞ்சல்யமடைந்தவளாய் அந்திவேளையில் நீராடி உயிருள்ளவனையொப்பச் சந்திராபீடனைக் கழுத்தில் இறுகத் தழுவினாள்.

சந்திராபீடனுக்கோ காதம்பரி கழுத்தை அணைத்துத் தழுவியதால், வெகுதூரம் சென்றிருந்தும் உயிர் மீண்டும்

உடனே கழுத்திடம் வந்துசேர்ந்தது. ஆனதுபற்றிச் சந்திராபீடன் உறங்கி யெழுந்தவன்போலே எல்லா உறுப்புக்களிலும் செயல்பெற்றவனாய்க் காதம்பரியை (க் குறித்துச்) சொன்னதாவது— "அச்சமுள்ளவளே, பயம் விடப்பட வேண்டும். உனது கண்டாலிங்கனங்கொண்டே மறுபடியும் உயிர் பெற்றவனாயிருக்கின்றேன். இப்பொழுதோ எனக்கு அந்தச் சாபம் இரண்டாம் முறையும் நீங்கிற்று. சூத்திரகன் என்ற பெயருடனிருந்த அந்த மானிடவுடல் என்னால் விலக்கப்பட்டது. 'உனக்கு இதில் அன்பு உண்டாயிற்று' என்று உன் பிரீதியால் (பிரீதிக்காக) இந்தச் சரீரம் காக்கப்பட்டதாய், (மீண்டும்) அங்கீகரிக்கப்பட்டது. மேலும், உன் அன்பார்ந்த தோழியான மஹாசுவேதையினுடைய காதலனும் என்னுடனேயே சாபம் நீங்கியவனாய்விட்டான்" என்று சந்திராபீடனுடலில் தன்னுருவத்தை மறைத்து நிற்கும் சந்திரன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, அதே வேஷத்தோடு புண்டரீகன் கபிஞ்சலனுடைய கையைப் பிடித்துக்கொண்டவனாய் ஆகாசத்திலிருந்து இறங்குகின்றவனாய்க் காணப்பட்டான்.

பின்னர்ச் சித்திரரதனையும் ஹம்ஸனையும் ஆநந்தத்தால் வளரச்செய்யக் (ஆநந்தவாழ்த்துகூற) கேயூரகன் ஹேமகூடம் சென்றான். மதலேகையும் ஓடியவளாய்த் தாராபீடனுடையவும் விலாஸவதியினுடையவும் கால்களில் விழுந்து, "பிரபுவே, (நீங்கள்) தேவியுடன் (நல்லவேளை) ஆநந்தத்தால் ஓங்கிவளர்கின்றீர்கள். இளவரசர் மீண்டும் உயிர் பெற்றுவிட்டார்" என்று ஆநந்தம்பொங்க உரக்கச் சொன்னான்.

தாராபீடனே அதனைக்கேட்டு ஸந்தோஷபரவசனாய் அங்குத்தானே வந்தான். சந்திராபீடனும் தாய்தந்தையரைக்கண்டு முன்போலவே கால்களில் விழுந்தான். விலாஸவதியோ அவனைத் தலையிலும் நெற்றியிலும் இருகன்னங்

களிலும் மீண்டும் மீண்டும் முத்தமிட்டு வெகுநேரம் மிகவும் இறுகத் தழுவினாள். தாயினால் விடப்பட்டவனாய்ச் சுகநாஸனை அணுகி அடிக்கடி நமஸ்காரம்செய்தவனாய், முறையே (தன்) தாய் தந்தையர்க்கும் சுகநாஸனுக்கும் மனோரமைக்கும் "இவன் உங்களுடைய வைசம்பாயனன்" என்று புண்டரீகனைக் காட்டினான். அவர்களெல்லாருக்கும் அவ்விரவு (இவர்களால்) அறியப்படாமலேயே புலர்ந்தது.

விடியற்காலையிலேயே சித்திரரதனும் ஹம்ஸனும் அங்கு வந்துவிட்டனர். வந்தவர்களாய்த் தாராபீடனோடும் சுகநாஸனோடும்கூடி (பரஸ்பர) ஸம்பந்தத்துக்குரிய பொருத்தப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருக்கும் அவர்களுக்கு அம்மஹோத்ஸவம் ஆயிரமடங்காக நிகழ்ந்தது. பின்னர்ச் சித்திரரதன் சந்திராபீடனை அழைத்துக்கொண்டு ஹேமகூடம் சென்றான். சென்றதும் காதம்பரியோடுகூடத் தன் ராஜ்ஜியம் முழுவதையுமே சந்திராபீடனுக்குக் கொடுத்தான். புண்டரீகனுக்கும் மஹாசுவேதையோடுகூடத் தன் பதவியை ஹம்ஸன் (கொடுத்தான்.)

மற்றொருஸமயம், மகிழ்வுற்றவளாயிருந்தும் காதம்பரி, முகத்தில் துயரக்குறி தோன்றியவளாய், "ஐயனே, நாம் எல்லோரும் இறந்தவர்களாகி மீண்டும் உயிர்த்தவர்களாய் ஒருவரோடொருவர் சேர்ந்தவர்களானோம். அவ்வேளை பத்திரலேகையோ நம்நடுவில் காணப்படவில்லையே. அவளுண்டான செய்தி என்ன" என்று (சந்திராபீடனை) வினவினாள். அவனோ "காதலி, அவள் இங்கேது? அவளோ ரோஹிணி. என்னைச் சபிக்கப்பட்டவனாகச் செவியுற்று, என் காற்கடைப் பணிகொள்வதற்காக மனுஷ்ய லோகத்தில் பிறப்பை ஏற்றாள். இதிலிருந்து (சந்திராபீட ஜன்மத்திலிருந்து) வேறு ஜன்மத்தை (சூத்ரக ஜன்மத்தை) அடைகின்ற என்னால் நன்மொழிகூறி வசப்படுத்தித் தன் (என்)

லோகத்தை (க் குறித்து) வலுவில் அனுப்பப்பட்டாள். அங்கே (நீ) அவளைக் காண்பாய்" என்று மறுமொழி கூறினான்.

இம்மாதிரி சந்திராபீடன் அங்குப் பத்துநாள் இருந்துவிட்டு மாமி மாமனார்களால் அனுப்பப்பட்டவனாய்த் தகப்பனாருடைய திருவடியருகு வந்தான். வந்ததும் புண்டரீகனிடம் ராஜ்ஜியபாரத்தை ஒப்படைத்தவனாய்ப், பிறந்த ஸ்தலத்தின்மீதுள்ள அன்பால் ஒருஸமயம் உஜ்ஜயினியிலும் கந்தர்வராஜன்மேலுள்ள மதிப்பால் ஒருகால் ஹேமகூடத்திலும், ரோஹிணியிடமுள்ள வெகுமானத்தால் ஒருஸமயம் சந்திரலோகத்திலும், புண்டரீகனிடத்திலுள்ள பிரீதியால் ஒருகால் அச்சோத தடாகத்திலும், காதம்பரியின் பிரியங்கொண்டு அழகிய அவ்வவ்விடங்களிலும் அந்தந்த ஸௌக்கியங்களை அனுபவித்துவந்தான். இந்த ஸௌக்கியத்தைக் காதம்பரியுடன் சந்திரன்மட்டும் அனுபவிக்கவில்லை. ஆனால் புண்டரீகனோடுகூடி மஹாசுவேதையும், சந்திரனோடுகூடிப் புண்டரீகனும், அநுபவித்தனர். இவர் யாவருமே ஒருவரைவிட்டொருவர்பிரியாமல் எப்பொழுதும் ஸுகங்களை அநுபவித்துக்கொண்டு ஆநந்தத்தின்மேலெல்லையை அடைந்தனர்.

காதம்பரி முற்றிற்று.